

தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 9
இதழ் : 4
பிப்ரவரி – 2013

செய்திமலர்

## பெனியேல்

## நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன்.

ஆதி. 32 : 30

ஆசிரியர் பேராயர். வே. தேவதாஸ்




சுதேச ஊழியர் சாட்சி

# Rev. தார்சிங் கட்டாரா

**பாடலா, இராஜஸ்தான்**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் தார்சிங் கட்டாரா. நான் இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவடத்திலுள்ள பாடலா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எங்கள் கிராமத்தில் அனைவரும் இறந்த முன்னோர்களின் ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்குபவர்கள். மேலும் மந்திரவாதிகளுக்கு பயந்து அவர்களை வழிபடுவோம். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் மந்திரவாதிகளிடம் ஆலோசனை கேட்டு, மந்திரக் கிரியைகளை நடப்பித்த பின்னர் தான், காரியத்தைச் செய்வோம்.

எனது வாலிபப் பிராயத்தில் நான் அதிகமாக சாராயம் குடிப்பவனாக காணப்பட்டேன். எங்கள் ஊரில் அனைவரிடமும் சண்டையிட்டு, யாருக்கும் கீழ்ப்படியாதவனாக மிகவும் மோசமாக வாழ்ந்து வந்தேன். இந்த சூழ்நிலையில் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆன பின்னரும் எனது வாழ்வில் சந்தோஷம் சமாதானம் இல்லாமல் காணப்பட்டேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எனது உடல் எரிச்சல் வியாதி வந்தது. இதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். எனது பெற்றோர் என்னை மருத்துவனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனாலும் பலனில்லை. மந்திரவாதிகளிடம் சென்று மந்திரக் கிரியைகள் செய்தனர். ஆனாலும் மாறாக எனது உடல் மிகவும் பலவீனமடைந்தது.

இந்த சூழ்நிலையில் கோய்க்கா கிராமத்தில் ஊழியம் செய்து வரும் சகோ. பாதர் பாரியா அவர்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடம் குடும்பமாகச் சென்றோம். அவர் எங்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி ஜெபம் செய்தார். கர்த்தர் ஜெபத்தினைக் கேட்டு எனது உடம்பில் இருந்த எரிச்சல் வியாதியிலிருந்து விடுதலை கொடுத்தார். இந்த அற்புதத்தினைக் கண்ட நானும் எனது குடும்பத்தாரும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு கோய்க்கா கிராம சபையில் விசுவாசிகளாக இருந்தோம். ஒரு நாள் கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பினை ஏற்று எனது சொந்த கிராமத்தினை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறேன்.

அதன்பின் B.Th., இறையியல் கல்வி கற்க தேவன் கிருபை செய்தார். 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டேன். மேலும் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிப்பது, சபைகள் மற்றும் ஊழியர்களை உருவாக்குவது போன்ற காரியங்களில் தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார். தற்போது எனது சபையில் 40 குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். மேலும் 8 ஊழியர்களை நான் உருவாக்க தேவன் கிருபை செய்துள்ளார். எனக்காகவும், எங்களது ஊழியங்களுக்காகவும், எனது குடும்பம் மற்றும் 4 பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jebathottam Trust, Kalaiyarkovil.**

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். உங்களுடன் இந்த பிப்ரவரி மாத இதழ் மூலம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஜனவரி மாதம் முழுவதும் கர்த்தர் நம்மோடு இருந்து ஊழியங்களை ஆசீர்வதித்தார். உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவுகளுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

ஜனவரி 1ம் தேதி அன்று மதுரையில் உள்ள சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் புத்தாண்டு ஆராதனையில் பங்கு பெறவும், புத்தாண்டு வாக்குத்தத்த செய்தியினைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபைத் தந்தார். தேவ ஆசீர்வாதம் இறங்கி வந்தது. என்னை அன்புடன் அழைத்த அன்பு போதகர் **V.T. ஜாண்சன்** அவர்களுக்காக, சபை கமிட்டி அங்கத்தினர் அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

மேலும் அன்று மதியம் நாலுமாவடியில் **இயேசு விடுவிக்கிறார்** ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டத்தில் பங்குபெற தேவன் கிருபை செய்தார். சுமார் 1 இலட்சம் தேவஜனங்கள் கூடி வந்த கூட்டத்தில் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும், அன்பு **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காகவும் தேவஜனங்களுடன் ஜெபிக்க தேவன் கிருபைத் தந்தார். பரிசுத்த ஆவியானவர் புது அபிஷேகத்தினாலும், வல்லமையினாலும், தம் கிருபையினாலும் நிரப்பினதை காண முடிந்தது. தொடர்ந்து நாம் நம் அன்பு **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காகவும், இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் ஜெபம் செய்வோம்.

ஜனவரி 2ம் தேதி தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் வைத்து அலுவலக ஊழியர்கள் மற்றும் முன்னேற்றப் பணி ஊழியர்களுக்கென்று புத்தாண்டு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் அடியேன் தேவனுடைய வாக்குத்தத்த செய்தியைக் கொடுக்க தேவன் கிருபை செய்தார். மேலும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 2012ல் பணித்தளத்தில் நடந்த காரியங்களை பகிர்ந்து கொண்டார்கள். மதிய வேளையில் 2013ஆம் ஆண்டு பணித்தளத்தின் ஊழியங்களுக்காகவும், ஊழியங்களின் தேவைகளுக்காகவும் சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் ஜெபத்தை நடத்தினார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் அனைவர்மேலும் ஊற்றப்பட்டது.

ஜனவரி 5ம் தேதி சென்னையில் நடைபெற்ற மாநில திறப்பின் வாசல் ஜெபமுகாமிலும் பங்குபெறவும், 12 மணி நேரம் தேவ ஊழியர்கள், போதகர்கள் மற்றும் சுமார் 2 இலட்ச தேவஜனங்களுடன் இணைந்து தமிழ்நாட்டின் ஆசீர்வாதத்திற்காகவும், தேசத்தின் எழுப்புதலுக்காகவும் ஜெபித்தது என்னால் மறக்க முடியாத ஆசீர்வாதமான ஒரு நாளாகும். இந்த முகாமின் ஆசீர்வாதத்திற்காகவும் முன்னின்று ஜெபிக்க தேவன் தந்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன். நிச்சயமாக இந்த வருடத்தில் தமிழகம் மட்டுமல்ல தேசத்தில் மிகப் பெரிய எழுப்புதலைக் காண்போம்.

ஜனவரி 7,8,10,11,12 ஆகிய தினங்களில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் சுதேச ஊழியர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் ஊழியர்கள், Project ஊழியங்கள் குடும்பங்களுக்காக புதிய வருட சிறப்பு கூடுகையை நடத்தத் தேவன் கிருபைத் தந்தார். மெய்யாகவே வாக்குத்தத்த செய்தியைக் கொடுத்து, ஜெபித்தபோது ஆவியானவர் அபரிதமாக இறங்கி வந்தார். இந்த வருட ஊழியத்திற்கு கண்ணீருடன் அனைவரும் அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை!

15.01.2012 செவ்வாய் கிழமை அன்று 48 சுவிசேஷகர்கள் இணைந்து 10 இலட்ச ஆத்துமாக்களை சந்திக்கும் திட்டத்தைக் குறித்து சாட்சிகளைக் கூறி திட்டங்களை பேசி தீர்மானித்து ஜெபித்து செயல்பட தேவன் கிருபைத் தந்தார். தொடர்ந்து இம்மாபெரும் திட்டத்திற்கு உங்கள் ஜெபங்கள் அதிகம் தேவை.

மேலும் ஜனவரி 19,20,27 ஆகிய தேதிகளில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமயில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநில ஷாலோம் சபைகளின் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறப்புக் கூடுகை நடைபெற தேவன் கிருபைத் தந்தார். 21.01.13 அன்று ஷாலோம் ஊழியக்காரிகள் இணைந்து முழு இரவு ஜெபம் நடத்தவும், தேசத்தின் எழுப்புதலுக்காகவும், அனைத்து பீல் மக்கள் இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்க தேவன் கிருபைத் தந்தார். ஜனவரி 26,28,29 ஆகிய தினங்கள் முறையே குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் அனைத்து ஷாலோம் ஊழியக்காரிகளுக்கான புதிய தரிசன அபிஷேக கூடுகை 2013, சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புதியத் திடடங்கள் பணித்தளங்களில் நிறைவேற்ற ஆயத்தமாவார்கள்.

தொடர்ந்து பிப்ரவரி மாத ஊழியங்கள் அனைத்திற்காகவும், குறிப்பாக 04.02.13 அன்று நடைபெற உள்ள Sharing Love Mission Board Meeting-க்காகவும், Shalom Charity Mission Board Meeting-க்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவன்தாமே எங்கள் குடும்பத்தை இன்னும் புதிய அபிஷேகத்துடன் ஷாலோம் ஊழியங்களை, முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தில் பயன்படுத்த ஜெபியுங்கள். குறிப்பாக அடியேன் 23.02.2013 அன்று 53 வருடங்களை முடிக்க தேவன் கிருபைத் தந்துள்ளார். புதிய ஆண்டில் தேவன் புதிய கிருபைகளைத் தந்து அவர் சித்தத்தை மட்டும் நிறைவேற்ற ஜெபியுங்கள்.

உங்களுக்காக, உங்கள் சபைகள், ஊழியங்கள், குடும்பத்திற்காக நாங்களும் அனுதினமும் ஜெபித்து வருகிறோம்.

**"என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்".** மல்கியா 4:2 என்ற வசனத்தின்படி தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# ùT ² úVp

## *தேவனை முகமுகமாய் தரிசித்த இடம்*

சிறப்புச் செய்தி : **Sis. வஹிதா தேவதாஸ்**



கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! 2013 ஜனவரியில் ஜெபித்து கொண்டிருக்கும் போது ஒரு தேவதூதன் எக்காளம் ஊதிக்கொண்டும், சுற்றிலும் அநேக தூதர்களும் எக்காளம் ஊதிக் கொண்டிருக்கிற காட்சியையும், **'பெனியேல்'** என்று எழுதியிருப்பதையும் தரிசனத்தில் கண்டு தேவனை மகிமைப்படுத்தினேன். ஆகவே **"பெனியேல்"** என்பதைக் குறித்து வேதம் கூறுவதை ஆராய்வோம்.

இஸ்ரவேல் என்று அழைக்கப்படும் யாக்கோபுடைய வாழ்க்கையில் நடைபெற்ற அநேக காரியங்களுக்கு அவர் விசேஷித்த பெயரிடுவதைக் காண்கிறோம். **"பெத்தேல்", "வானத்தின் வாசல்", "மிஸ்பா", "மக்னாயீம்", "பெனியேல்"** என்று பெயரிட்டிருக்கிறார். யாப்போக்கு என்றும் சிற்றாற்றின் கரையில் அமைந்துள்ள இடம் தான் **"பெனியேல்".** "பெனியேல்" என்பதற்கு தேவனுடைய முகம்' என்று அர்த்தம்.

ஆதியாகமம் 32:24–30 வரையில் பெனியேலைக் குறித்து மூன்று காரியங்களைப் பார்ப்போம். முதலாவது மனிதரோடு போராடி மேற்கொண்டு வெற்றி பெற்ற இடம் என்றும், இரண்டாவது, தேவனோடு போராடி மேற்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்ற இடம் என்றும், மூன்றாவதாக தேவனை முகமுகமாய் கண்டு தரிசித்த இடம் என்று கூறலாம்.

### 1. மனிதரோடு போராடி மேற்கொண்டு வெற்றி பெற்ற இடம்

யாக்கோபு தன்னுடைய பெற்றோர்களால், பதான்அராமில் இருந்த தன் மாமன் லாபானிடத்திற்கு அனுப்பப்பட்டான். அவன் போகிற வழியில் பெத்தேலில் தேவன் அவனுக்கு தரிசனமானார். அவன் அவரை வணங்கி ஒரு பொருத்தனை செய்தான். பின்பு பதான் அராமுக்கு போய், தன் மாமனுக்கு கீழே இருந்து ஊழியம் செய்து, சம்பாதித்து, அவனுடைய இரண்டு குமாரத்திகளை விவாகம் செய்து, பிள்ளைகளையும் பெற்றான். ஆதி.29:14ல் யாக்கோபு லாபானை முதன்முதல் சந்தித்தபோது **"நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன்"** என்றார். ஆனால் பின்பு சம்பாத்தியத்தை குறித்து அவனுக்கும் மாமனுக்கும் இடையில் அடிக்கடி தர்க்கம் வந்தது. ஆதி.31:40,41ல் வாசித்தால் மாமனார் வீட்டில் எவ்வளவாய் பாடுபட்டார் என்பதைப் பார்க்கலாம். "பகலிலே வெயிலும், இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்கு தூரமாயிருந்தது; இவ்விதமாய் பாடுபட்டேன் என்றும், இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்து முறை என்

சம்பளத்தை மாற்றினீர்" என்று அங்கலாய்த்தார். ஒரே போராட்டம் தான். அது மட்டுமல்லாமல் அடிக்கடி லாபானின் முகம் வேறுபட்டு போய்விடும். இவ்வளவாய் பாடுபட்டும் லாபானுடைய குமாரர்கள் மூலம் நிந்தையான பேச்சைக் கேட்டான். ஆதி.31:1ல் **"லாபானுடைய குமாரர்: எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக் கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்த செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்றும் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்டான்".** எவ்வளவு போராட்டம் பாருங்கள். ஆனாலும் யாக்கோபு கூட தேவன் இருந்தார். ஆதி.31:5ல் **"ஆனாலும் தேவன் என்னோடுகூட இருக்கிறார்"** என்று கூறுவதைக் காண்கிறோம். **"தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?".** ரோமர் 8:31

பிரியமானவர்களே! நம்முடைய வாழக்கையிலும் கூட இப்படிப்பட்ட போராட்டங்கள், நெருக்கடிகள், ஏமாற்றங்கள், ஏளனமான பேச்சுகளைக் கேட்டு வேதனை அடைகிறோம். கவலைப்படாதீர்கள். நிச்சயம் போராட்டத்தை மேற்கொள்வீர்கள், வெற்றி பெறுவீர்கள். யாக்கோபு பொறுமையாய்ப் போராடினான். மாமனுக்கு விரோதமாய் எந்த தீங்கும் செய்ய முற்படவில்லை.

ஆதி.31:42ல் "என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர். தேவன் என் சிறுமையையும், என் கைப்பிரயாசத்தையும் பார்த்து நேற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார் என்று சொன்னான்". கர்த்தர்தாமே ஒருநாள் இரவு மாமன் லாபானைக் கடிந்து கொண்டார். அதன்பின்பு அவன் மனம் மாறினது. பாருங்கள் ஆதி. 31:55ல் "லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்தஞ்செய்து, அவர்களை ஆசீர்வதித்தான்". இதைப் பார்க்கும்போது யாக்கோபு மனிதனோடு போராடி வெற்றி பெற்றான் என்பது நிச்சயம். இதைப் போலதான், தேவன் தாமே உங்களோடும் கூட இருந்து உங்களிடம் பேராடினவர்கள் தாங்களே வந்து உங்களை ஆசீர்வதிக்கும்படி செய்வார். நிச்சயம் உங்களை தேவன் பெனியேலுக்குள் அழைத்துச் செல்வார்.

### 2. தேவனோடு போராடி மேற்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்ற இடம்

ஆதி. 31:3 "கர்த்தர் யாக்கோபை நோக்கி: உன் பிதாக்களுடைய தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன் என்றார்" அதன்படி யாக்கோபு பதான்அராமிலிருந்து புறப்பட்டு குடும்பமாய், மந்தைகள், பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கானான் தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போக புறப்பட்டான் (ஆதி.31:17).

முதலாவது, தன்னுடைய மூத்த சகோதரன் ஏசாவோடுகூட நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணத்தோடு, ஏசாவுக்கு வெகுமதிகளை அனுப்பி, சாந்தப்படுத்தி கொள்கிறான். ஆதி. 33:3ல் "யாக்கோபு அவர்களுக்கு முன்னாக நடந்துபோய் ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான்" அவனுக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுத்து, அவனை மேன்மைப்படுத்தி தன்னைத் தாழ்த்தினான்.

இரண்டாவது, யாக்கோபு தேவனாகிய கர்த்தரை நோக்கி, விண்ணப்பம் பண்ணி, தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான். ஆதி.32:10ல் "அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல" என்று தன்னை தாழ்த்தினான். "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" தேவனிடத்திலிருந்து ஒரு பெரிய ஆசீர்வாதம் கிடைப்பதற்கு முன்பாக யாக்கோபு தன்னை தாழ்த்துவதைப் பார்க்கிறோம். எவ்வளவு ஆசீர்வாதங்கள் அவன் பெற்றிருந்தாலும் கூட, அது அவனால் உண்டானதல்ல, எல்லாம் தேவனால் அருளப்பட்டது என்று திட்டமாய் அறிந்திருந்தபடியால், மறுபடியும் கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன் தேவனை பிடித்துக் கொண்டான். ஆதி.32:24,25ல் ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ள முடியவில்லை. ஆதி.32:26ல் "அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" என்று வைராக்கிய வாஞ்சையாய் இருந்தான். இரவு முழுவதும் தேவனோடு போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்.

மேலும் உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும் என்றார். பதான் அராமுக்கு போகும்போது பழைய யாக்கோபாக சென்றான். ஆனால் மறுபடி கானானுக்குள் பிரவேசிக்கும்போதோ இஸ்ரவேல் என்று தேவனால் புதுநாமம் பெற்றான். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்று சொல்லப்படுகிற அந்த முற்பிதாக்களின் வரிசையில் நிற்கும் மேன்மையைப் பெற்றுக்கொண்டான்.

நமக்கு எந்தக் காரியத்தில் ஜெயம், வெற்றி வேண்டுமோ அதற்காக நாமும் தேவனோடு ஜெபத்தில் போராடி, அவரை விடாமல் பிடித்துக் கொண்டால் அவர் உங்களை ஆசீர்வதிப்பார் மற்றும் மேன்மைப்படுத்துவார். அப்போ. 4:12ல் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" தேவனோடு போராடி மேற்கொண்டு ஆசீர்வாதத்தை பெற்ற இடம்தான் பெனியேல். நாமும் ஜெபிப்போம், போராடுவோம், ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோமாக!

## 3. தேவனை முகமுகமாய் கண்டு தரிசித்த இடம்

ஆதி.32:30ல் "அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு பெனியேல் என்று பேரிட்டான்". இதனால் பெனியேல் என்றால் தேவனைக் கண்டு தரிசித்த இடம் என்றும், தேவனே வந்து இறங்கின இடம் என்றும், ஒரு மனிதனோடு இரவு முழுவதும் நேரம் செலவழித்த இடம் என்றும் விளங்குகிறது.

ஆனால் அந்த நாளிலே யாக்கோபு அதிகமான வேலைகளை, கடமைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் இருந்தது. தன் சகோதரன் ஏசாவை சந்திக்கும்படியான முன் ஏற்பாடுகளைச் செய்திருந்தான். தனக்கு முன்பாக ஆட்களை அனுப்பினான். பின்பு ஏசா 400 பேரோடு யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார் என்று கேள்விப்பட்டபோது, மிகவும் பயந்து

தன்னிடத்திலிருந்த ஜனங்களையும், ஆடுமாடுகளையும். ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாக பிரித்தான். மட்டுமல்லாமல், தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமதி கொடுக்கும்படியாக, ஆதி. 32:14–16 "இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும், பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து, வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையைத் தனிதனியாக ஒப்புவித்து, நீங்கள் மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்னாக ஓட்டிக் கொண்டுபோங்கள் என்று தன் வேலைக்காரருக்குச் சொன்னார்".

பாருங்கள், பிரித்தெடுப்பது என்பது எவ்வளவு பெரிய வேலை. அது ஒரு சாதாரணமான காரியம் கிடையாது. மற்றும் வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையைத் தனித்தனியாக ஒப்புவித்தான். இதுவும் கடினமான காரியம்தான். மற்றும், நீங்கள் மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்பாக ஓட்டி கொண்டு போங்கள் என்றும், ஏசாவை முதலில் சந்தித்தால் என்ன செய்யவேண்டும், என்ன பதில் பேச வேண்டும் என்று வேலைக்காரர்களுக்கு அறிவுரைக் கூறினான். இதுவும் பெரிய பொறுப்பு. மட்டுமல்லாமல், ஆதி. 32:22,23ல் ''இராத்தியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக்கொண்டு, யாபோக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான். அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான்''. என்று எழுதியிருக்கிறது. மிகவும் கடினமாய் உழைத்து, பாடுபட்டு, மிகவும் களைப்பாய் இருந்திருப்பான் அல்லவா? நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? என்று சற்று சிந்திப்போமாக.

ஆனால் வேதம் சொல்லுகிறது, இத்தனைக் காரியங்களையும் யாக்கோபு செய்து முடித்த பின்பு ஆதி.32:24ல் "யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்" அப்படியென்றால், தனித்து தேவனோடு இருந்தான். இரவில் கொஞ்சநேரம் கூட இளைப்பாற மனதில்லாமல், தூக்கத்தை தியாகம் பண்ணி, தூக்கத்தை விட மேலான தேவ பிரசன்னத்தை நாடினான்.

நாமும் கூட தேவனோடு தனித்திருக்கும்படியாக நேரத்தை ஒதுக்கவேண்டும். சமயம் கிடைக்காவிட்டால் கூட, இளைப்படைந்து இருந்தாலும் கூட அதின் மத்தியில் நாம் தேவனோடு தனித்து இருக்கவேண்டும். இப்படி தனித்து இருந்தவேளையில்தான் யாக்கோபு தேவனை முகமுகமாய் கண்டேன் என்று கூறுவதைப் பார்க்கிறோம். தேவனை முகமுகமாய் தரிசிப்பது எவ்வளவு பெரிய பாக்கியம். சங்கீதம் 34:5ல் "அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை".

யாக்கோபும் தேவனை தரிசித்து கோத்திர பிதாக்களில் ஒருவனாய் மாறினார். மட்டுமல்லாமல், இவனுடைய பிள்ளைகள் 12 கோத்திரங்களாய் மாறினார்கள். வெளி. 21:13ல் "...அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய

நாமங்களும் எழுதப்பட்டிருந்தன''. புதிய எருசலேமாகிய தேவனுடைய வாசஸ்தலத்தில் வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்கள் எழுதப்பட்டிருக்கும் பாக்கியம் பெற்றான்.


இதை வாசிக்கும் தேவபிள்ளைகளே, மனிதர்கள் மூலம் உங்கள் வாழ்க்கையில் போராட்டத்தை அனுபவித்து சகித்துக் கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள், உங்கள் பொறுமைக்கு பலனை இப்பொழுதே தேவன் நிச்சயம் கட்டளையிடுவார். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மற்றும் நீங்கள் உன் தேவனுக்கு முன்பாகவும் மற்ற சகோதரருக்கு முன்பாகவும் உங்களை தாழ்த்துவீர்களானால் தேவன் உங்களோடுகூட இருப்பார். நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் உங்களுடைய அதிக அலுவல்கள் மத்தியிலும் தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரத்தைச் சரியாகக் கொடுத்து தேவனோடு தனித்து இருப்பீர்களானால், தேவனை முகமுகமாய் தரிசிக்கும் ஆவிக்குரிய அனுபவங்களையும், உன்னத மேன்மையையும் அடைவீர்கள்.

பிரியமானவர்களே, தேவன்தாமே உங்கள் வாழ்க்கையிலும், பெனியேல் என்ற வார்த்தையில் அடங்கியுள்ள மூன்றுவித ஆசீர்வாதங்களைத் தந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

---

## 23.02.2013 Auß ©\kRSôs LôÔm

## பேராயர் தேவதாஸ் அவர்கள்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

**2013 பிப்ரவரி 23ம் தேதி** அன்று என்னுடைய வாழ்வில் 53 ஆண்டுகளை நிறைவு செய்ய தேவன் கிருபை செய்கிறார். அவருக்கே துதி, கனம், மகிமையை செலுத்துகிறேன்.

எனக்கு ஜீவன் தந்து, இரட்சித்து அபிஷேகித்து ஊழிய அழைப்பைத் தந்து நல்ல இல்லற வாழ்வினைத் தந்து ஒரு ஜாதி (பீல்) மக்களுக்கு ஆசீர்வாதமாக உருவாக்கிய திரியேக தேவனுக்கு நன்றி செலுத்தி எனது வாழ்வில் இனிவரும் காலம் முழுவதும் அவருக்காக பணிபுரிய என்னை அர்ப்பணிக்கின்றேன்.

*Rt. Rev. Dr. V.* தேவதாஸ்

**"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்"** எரே. 1:5




# வேதம் வழங்குவோம் வாருங்கள்

***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் மற்றும் பீல் ஆதிவாசி வாலிபர்களுக்கு புதிய ஏற்பாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2010 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **“சிறப்பு விருது”** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2013ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் மற்றும் 5000 புதிய ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ரூ. 100/– வீதம் 10000 வேதாகமங்களுக்கும், வாலிபர்களுக்குக் கொடுப்பதற்காக ரூ. 50/– வீதம் 5000 புதிய ஏற்பாடுகளுக்கும் நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி **ரூ. 10,25000/–** கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்கள் மற்றும் புதிய ஏற்பாடுகளை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம்.

அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

---

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,**
**என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.** சங்கீதம். 119 : 105

# 2012-ல் ஷாலோம் பணித்தளங்களில் தேவன் செய்த மகத்தான காரியங்கள்

**தேவனுக்கே மகிமை!!!**

**"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்"** உபாகமம் 28:1. இந்த வாக்குத்தத்தத்தின் படி தேவன் 2012–ல் ஊழியத்தையும், ஊழியர்களையும் மேன்மைப்படுத்தி ஆசீர்வதித்தார். **தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.**

## I. கூட்டங்கள்

**1. ஊழியர்கள் கூட்டம்**

ஒவ்வொரு மாதமும் ஊழியர்கள் கூடுகை 4 இடங்களில் மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. குஜராத் மற்றும் மத்தியபிரதேசம் ஊழியர்களுக்கு Dahod Centre–ரிலும் இராஜஸ்தான் ஊழியர்களுக்கு கோய்க்கா மற்றும் ஹெஜாமால் பகுதிகளிலும் கூட்டங்கள் நடைபெற்றது. ஊழியர்கள் உற்சாகமாய் கலந்து, தேவனைத் துதித்து, ஆடிப்பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மேலும் ஒவ்வொரு மாதமும் புதிய வல்லமையை பெற்று ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

**2. மூத்த ஊழியர்கள் கூட்டம்**

கடந்த ஆண்டிலும் மூத்த ஊழியர்கள் அதாவது தலைமை ஊழியர்களை அடிக்கடி சந்தித்து ஊழியங்களைக் குறித்து கலந்து ஆலோசித்து, திட்டமிட்டு செயல்பட தேவன் கிருபை செய்தார்.

**3. பணித்தள அலுவலர்கள் கூட்டம்**

ஒவ்வொரு மாதமும் 2–ம் தேதி பணித்தள அலுவலர்களுக்கென்று கூட்டம் நடத்தப்பட்டு, அதில் அந்தந்த மாதத்திற்குரிய ஊழியங்களுக்காக விஷேச ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. மேலும் இதில் அந்த மாதத்திற்குரிய திட்டங்களும் தீர்மானிக்கப்பட்டது.

**4. Project Staff கூட்டம்:**

ஒவ்வொரு மாதமும் 30ம் தேதி Gujarat CDC (Hirola & Jeri) யிலுள்ள staff – களுக்கும், மற்றும் Alp Project (Guj) மற்றும் MP CDC (Anthervelia) staff யாவருக்கும், விசேஷ கூட்டம் நடத்தப்பட்டது.

**5. ஊழியக்காரிகள் கூட்டம்**

மாதத்தின் முதல் நாள் 1ம் தேதி Dahod Centre ல் மூத்த ஊழியக்காரிகளுக்கு (Pastor's wife) 100 பேர் இணைந்து உபவாசத்தோடு வந்து இந்த கூட்டத்தில் பங்கெடுக்கிறார்கள். பாடல், ஆராதனை, சாட்சி வேளை மற்றும் செய்தி, விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் இந்த கூட்டங்களை நடத்துகிறார்கள்.

### 7. பகுதிவாரியாக ஊழியக்காரிகள் கூட்டம்

இந்த மூத்த ஊழியக்காரிகள் தலைமையில் அந்தந்த பகுதிகளில் உள்ள மற்ற ஊழியக்காரரின் மனைவியர்களுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மூன்று இராஜ்ஜியங்களிலும் சேர்த்து 30 இடங்களில் மாதந்தோறும் கூட்டங்கள் நடைபெறுகிறது. கடந்த ஆண்டில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இந்த 450 ஊழியக்காரிகள் அனைவரையும் சந்தித்து அந்தந்தப் பகுதிகளில் சுமார் 10 இடங்களில் கூட்டங்கள் நடத்தினார்கள்.

### 7. மூப்பர்கள் எழுப்புதல் கூட்டம்

கடந்த ஆண்டு 3 மாநிலங்களிலும் சேர்த்து, சுமார் 16 இடங்களில் மூப்பர்களுக்கென்று விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதை **பிஷப். தேவதாஸ்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். இதில் சபைக்கு 3 முதல் 5 மூப்பர்களை அழைத்தோம். இந்த கூட்டத்தில் சுமார் 3800 மூப்பர்கள் பெலப்பட்டனர். அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள். ஆத்துமாக்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். இந்த மூப்பர்கள் சபையில் ஊழியருக்குத் துணையாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

### 8. மூப்பர்களின் மனைவியர்களின் கூட்டம்

மூப்பர்களின் மனைவியர்களுக்கென்று 3 மாநிலங்களிலும் சுமார் 10 இடங்களில் விசேஷித்த கூட்டங்ளை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள். இதில் சுமார் 2000 பெண்கள் பங்கு பெற்று விடுதலையையும், அபிஷேகத்தையும், ஆத்தும பாரத்தையும் பெற்றார்கள். சபையின் போதகர் அம்மாவுடன் இணைந்து இவர்கள் செயல்படுகிறார்கள்.

### 9. விசுவாசப் பெண்கள் கூட்டம்

மூத்த சுதேச ஊழியர்களின் மனைவியர்கள் தங்கள் சபைகளில் மாதந்தோறும் விசுவாசப் பெண்களுக்கென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். அதில் ஆத்துமாக்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கிறார்கள். மட்டுமல்லாமல் பயிற்சிபெற்ற 150 ஊழியக்காரிகள் 25 குழுக்களாகப் பிரித்து 600 ஷாலோம் திருச்சபையின் அனைத்து விசுவாசி பெண்களையும் சந்தித்து, விசேஷ கூட்டங்கள் நடத்தினார்கள். இதில் தேவன் அநேக அற்புத சாட்சிகளை எழுப்பினார். மட்டுமல்லாமல் சபையின் பெண்கள் ஸ்திரப்படுத்தப்பட்டார்கள்.

### 10. ஞாயிறுபள்ளி ஆசிரியர் கூட்டம்

கடந்த 1 1/2 வருடங்களாக தேவன் நமது சபையில் எழுப்பியுள்ள ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கென்று 2 மாதத்திற்கு ஒருமுறை விசேஷ கூட்டங்களை நடத்தி வருகிறோம். இதில் அவர்கள் ஞாயிறு பள்ளி வருகை பதிவேடு மற்றும் காணிக்கைப் பெட்டியையும் கொண்டு வருவார்கள். மேலும் இவர்களுக்கு விசேஷ பல்லவிகள் மற்றும் வேதபாட கதைகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு சிறிய காணிக்கையும் வழங்கப்படுகிறது.

## II. ஜெபங்கள்

### 1. சங்கிலித் தொடர் ஜெபம்

நம்முடைய ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமாக தினமும் ஒரு ஊழியர் குடும்பம் Training Centre, Dahod–ல் உள்ள சிறு அறையில் தொடர்ச்சியாக ஜெபித்து வருகிறார்கள். இதில் ஜெபக்குறிப்புகளும், தாலுகா மற்றும் கிராமங்களின் பெயர்களும் வைத்து கருத்தாய் சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஜெபித்து வருகிறார்கள்.

### 2. முழு இரவு ஜெபம் (ஆண்கள் மற்றும் பெண்கள்)

ஒவ்வொரு மாதமும் மாதத்திற்கு ஒருமுறை ஆண்கள், பெண்கள் முறையே முழுஇரவு ஜெபம் Dahod–ல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பணித்தள அலுவலர்கள் மற்றும் முக்கியமாக சுதேச ஊழியர்கள் பங்கெடுக்கிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்கள் சந்திக்கப்படும்படியாய் பாரத்தோடு ஜெபிக்கிறார்கள்.

### 3. அந்நிய பாஷை ஜெபம்

மாதத்திற்கு ஒருமுறை அதாவது முதல் வாரத்தில் 3 மாநிலங்களிலும், 8 இடங்களில் அந்தந்தப் பகுதிகளில் கூடி 3 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபம் ஏறெடுத்து வருகிறார்கள். இதில் அநேகர் தரிசனங்களைக் காண்கிறார்கள். இது நமது தரிசனப்பணியில் இன்னும் முன்னேறிச் செல்ல உற்சாகம் அளிக்கிறது.

### 4. பெண்கள் உபவாச ஜெபம்

சுதேச ஊழியர்களின் மனைவியர்கள் அந்தந்த பகுதி வாரியாக பிரிக்கப்பட்டு, 7, 7 நாட்கள் முறையே வருடம் முழுவதும் தொடர் உபவாச ஜெபம் செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல் 1 நாள், 3 நாள், 21 நாள், 40 நாள் என்று பிரித்தும் உபவாச ஜெபம் செய்யப்படுகிறது.

### 5. பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான ஜெபம்

3 மாநிலங்களிலும் 3 இடங்களில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கென்று விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் சுமார் 700க்கும் அதிகமான பிள்ளைகள் கலந்துக் கொண்டு ஜெபித்துச் சென்றார்கள். இதன் விளைவாக 70 – 80% மதிப்பெண்கள் பெற்று பல தரப்பட்ட உயர்தர கல்வியில் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

### 7. 40 நாள் உபவாசஜெபம் (40 days Fasting Prayer) :

லெந்து நாட்களில் சபையார் யாவரும் 40 நாட்கள் உபவாச ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவர்களும் கூட மிகுந்த உற்சாகமாய் உபவாசம் ஜெபம் செய்கிறார்கள். இந்த 40 நாட்களும் சபையில் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நாள் என்று தொடர் உபவாச ஜெபம் செய்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வெள்ளியும் சபையார் அனைவரும் சேர்ந்து உபவாச ஜெபம் ஏறெடுக்கிறார்கள்.

**6. தொலைபேசி மூலமாக ஜெபம் (Phone Prayer)**

தொலைபேசி மூலம் விசுவாசிகள் இரவும், பகலும் ஜெபத்திற்காக தொடர்புகொள்ளுகிறார்கள். தேவன் தொலைபேசி ஜெபத்தைக் கேட்டு மக்களுக்கு சுகத்தை கட்டளையிடுகிறார், விடுதலை அடைகிறார்கள். விசேஷமாக பாம்பு கடித்து ஜெபிக்கிறவர்களும் அதிகம். தேவன் அவர்களை உடனடியாக விடுவிக்கிறார்.

## III. பயிற்சிகள் (Training)

**1. புதிய சுதேச ஊழியர்கள் பயிற்சி**

கடந்த ஆண்டு சுமார் 30 புதிய ஊழியர்களுக்கு 1 மாத ஊழியம் மற்றும் வேதாகமப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் யாவரும் புதிய கிராமங்களிலிருந்து வந்தவர்கள். பயிற்சி பெற்று, கர்த்தருக்காக ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்து, சபைகளை நிறுவியுள்ளார்கள். தொடர்ந்து சபை வளர்ந்து வருகிறது. ஊழியர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார்.

**2. CBC (VBS) ஆசிரியர் பயிற்சி**

கடந்த ஆண்டு விடுமுறை வேதாகமப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆசிரியர்களுக்கென்று விசேஷப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில சுமார் 900 பேர்கள் 10 நாட்கள் பயிற்சி பெற்றார்கள். **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பில் பாடங்கள், கதைகள், பாடல்கள், குறுநாடகங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இவர்கள் போய் சபைகளில் 30,000 சிறுவர்களுக்கு VBS வகுப்புகள் நடத்தினார்கள்.

**3. ஆரம்ப சுகாதார பயிற்சி (Medical Health Training)**

கடந்த வருடம், இதுவரை ஆரம்ப சுகாதார பயிற்சி எடுக்காத ஊழியர் மற்றும் ஊழியக்காரிகள் சுமார் 70 பேருக்கு 5 நாட்கள் பயிற்சி கொடுக்கப்பட்டன. **Dr. Abel, Dr. Jolly Abel Dr. Inba** மற்றும் சகோதரிகள் வந்து மிகவும் சிறப்பாய் பயிற்சிகள் கொடுத்தார்கள்.

**4. சிறப்பு ஆங்கிலப் பயிற்சி**

ஷாலோம் பணித்தள அலுவலர்களுக்கும், Project பணியாளர்களுக்கும், பிஜல்பூர் பள்ளிகூடம் ஆசிரியர்களுக்கும் சேர்ந்து சுமார் 70பேருக்கு ஆங்கில மொழிப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இதற்காக சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, ஸ்கூல் பிரின்சிபால் அவர்கள் **சகோதரி. அனிதா** மற்றும் **சகோதரி. கிறிஸ்டினா** ஆகியோரை ஏற்பாடு செய்து அனுப்பியிருந்தார்கள். இவர்கள் பீல் மக்களோடு சேர்ந்து இணைந்து அன்பாக பழகி, மிகவும் புரிந்துக் கொள்ளும் அளவிற்கு நன்றாக ஆங்கிலப் பயிற்சியைக் கொடுத்தார்கள். அடிப்படை ஆங்கில அறிவினைப் பெற்றுக் கொண்டு, ஆங்கிலத்தில் ஓரளவு பேசும்படியாக முன்னேறியுள்ளார்கள்.

### 5. சபை மூப்பர்களுக்கான சபை வளர்ச்சி பயிற்சி (Bild Training)

சபையின் மூப்பர்களுக்கு விசேஷமாக சபை வளர்ச்சி மற்றும் சபையின் ஒழுங்குகள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி Bless India-Bild ஸ்தாபனத்தின் மூலம் நடத்தப்பட்டது. இதில் சுமார் 261 இளைய ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கு 4 நாட்கள் சீஷர்களை உருவாக்குதல் என்ற தலைப்பில் நடைபெற்றது. Bild ஸ்தாபனத்தின் மூலம் கல்வியறிவு இல்லாத பீல் ஜனங்களுக்கு பீலி மொழியில் 500 மற்றும் பிலோடி மொழியில் 500 Mega Voice (Talking Bible) வழங்கப்பட்டது. இதன் மூலம் நமது பீல் ஆதிவாசி விசுவாசிகள் வசனத்திலும் விசுவாசத்திலும் வளர்ந்தனர்.

## IV. முகாம்கள்

### 1. சிறுவர்கள் முகாம்

கடந்த ஆண்டில் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் 4 வயது முதல் 12 வயது வரை உள்ள நாம் தாங்கி வருகின்ற சிறுவர்களுக்கென்று ஹிரோலா, ஜெரி, அந்தர்வேலியா மற்றும் பிஜல்பூர் ஆகிய 4 இடங்களிலும் **"நீ யார்? உன் நண்பன் யார்?"** என்ற தலைப்பில் விசேஷித்த முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 602 பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இந்த முகாமில் நடத்தப்பட்ட அபிநயப் பாடல்கள், குழு கலந்துரையாடல் மனப்பாட வசனம் கூறுதல், வேதாகமக் கேள்வி பதில், பொம்மலாட்டம் நிகழ்ச்சி போன்றவற்றில் சிறுவர்கள் உற்சாகமாய் பங்கு பெற்றனர்.

இதை குறித்து **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பிள்ளைகளுக்கு கதை மூலம் செய்தி அளித்தார்கள். ஆராதனை வேளையில் பிள்ளைகள் அபிஷேகம் பெற்றார்கள். Quiz–ல் பிள்ளைகளுக்கு உற்சாகப்படுத்தும்படியாய் பரிசுகள் வழங்கப்பட்டது. பங்கு பெற்ற யாவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

### 2. வாலிபர் முகாம்

ஜனவரி மாதத்தில் தேவன் கொடுத்த தரிசனத்தின்படி வாலிபர்களுக்கென்று விசேஷித்த முகாம்கள் 7 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் 1627 வாலிப சகோதர, சகோதரிகள் பங்குபெற்றார்கள். **"உண்மை நண்பன் இயேசு"** என்ற தலைப்பின் கீழ் இந்த முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் கருப்பொருளுக்கு ஏற்ப விசேஷித்த பாடல்கள் மற்றும் குறுநாடகங்கள், குழு ஆலோசனை வேளை, ஜெபவேளை நடத்தப்பட்டன. இந்த முகாம்களை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் நடத்தினார்கள். இந்த முகாமின் இறுதி வேளை அபிஷேகத்திற்கென்று விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. வாலிபர்கள் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள்.

மேலும் நவம்பர் மாதம் 15ம் தேதி **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் பணித்தளத்திற்கு வந்திருக்கும்போது வாலிபர்களுக்கென்று சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. இதில் சுமார் 2800 வாலிப சகோதர, சகோதரிகள் பங்குபெற்று தானியேலைப் போல

வாழும்படியாக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தது மட்டுமல்லாமல், சரீரத்தில் அற்புத சுகத்தையும், விசேஷித்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த வாலிபர் முகாம் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலுக்கு அடையாளமாக அமைந்தது.

**3. Vision India - நியூ டெல்லி சிறப்பு வாலிபர் முகாம்**

விஷன் இந்தியா என்ற ஸ்தாபனத்தின் மூலமாக வட இந்தியாவில் முதல் முறையாக டெல்லியில் எந்தவித சபை பாகுபாடில்லாமல் 10,000 வாலிபர்களுக்கென்று சிறப்பு முகாம் 5 நாட்கள் நடத்தப்பட்டது. இதில் பல மாநிலங்களிலிருந்தும் வாலிபர்கள் வருகை தந்தார்கள். விசேஷித்த தேவ ஊழியர்கள் வந்து ஆராதனை மற்றும் சிறப்பு செய்தி அளித்தார்கள். இதில் **பிஷப். தேவதாஸ்** அவர்களும் சீஷத்துவத்தை பற்றி சிறப்பு செய்தி வழங்கினார்கள். நமது ஷாலோம் சபையிலிருந்து 100 வாலிபர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். இந்த முகாமில் ஷாலோம் மூலம் வாலிபர்களுக்கென்று Hey Friend என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட CD ஜெபித்து வெளியிடப்பட்டது.

**சிறப்பு வாலிபர் முகாம்கள்**

விஷன் இந்தியா ஸ்தாபனத்தின் மூலம் வட இந்தியாவிலுள்ள வாலிபர்களுக்கென்று 14.01.2012 ல் நாக்பூரில் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை கொடுக்கும்படியாய் அழைப்பு கொடுத்தார்கள். வாலிபர்கள் **பிஷப் தேவதாஸ்** அவர்களுடைய சாட்சியின் மூலம் தொடப்பட்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டு அந்நிய பாஷை அடையாளங்களுடன் அபிஷேகத்தைப் பெற்றார்கள். தேவன் வட இந்தியா வாலிபர்களின் ஆசீர்வாதத்திற்கென்று பயன்படுத்தினார்.

தேவகிருபையால் பிப்ரவரி 21,22 தேதிகளில் பீஹார் மாநிலத்தில் Born Network மூலமாக சபை வளர்ச்சிக்கான எழுப்புதல் முகாம் **Rev. Dr. S.D. பொன்ராஜ்** அவர்கள் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் 300க்கும் அதிகமான போதகர்கள், மனைவிமார்கள், மூப்பர்கள் பங்கு பெற்றார்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்கள் திருச்சபை வளர்ச்சியில் பரிசுத்த ஆவியானவர் என்ற தலைப்பில் செய்திகள் வழங்கினார்கள். இறுதியில் அனைவர் மீதும் ஆவியானவர் ஊற்றப்பட்டார். ஆவிக்குரிய வரங்களினாலும், ஆத்தும பாரத்தினாலும நிரப்பப்பட்டார்கள். சபை வளர்ச்சியில் புதிய நம்பிக்கையுடன், புதிய தரிசனத்துடன், புதிய அபிஷேகத்துடன் கடந்து சென்றார்கள். தேவனுக்கே மகிமை!

**4. இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா, குஜராத் – 2012**

தேவகிருபையால் குஜராத்தில் இயேசு அழைக்கிறார் மூலமாக நடைபெற்ற பிரார்த்தனை திருவிழா குஜராத்தில் சோன்கட் பகுதியில் நடைபெற்றது. சுமார் 5 இலட்சங்களுக்கும் அதிகமான ஜனங்கள் பங்குபெற்றார்கள். நாங்கள் குடும்பமாக பங்குபெறவும், பிரார்த்தனை திருவிழாவின் ஆசீர்வாதத்திற்காக முன் நின்று ஜெபிக்கவும் தேவன் கிருபைத் தந்தார். மட்டுமல்ல ஷாலோம் சபைகளிலிருந்து திரளான விசுவாசிகள்,

மூப்பர்கள், போதகர்கள் பங்கு பெற்றார்கள். அநேகர் தெய்வீக சுகம் பெற்றார்கள். அபிஷேகத்தையும் தரிசனத்தையும் பெற்றார்கள்.

குறிப்பாக ஷாலோம் ஊழியர்கள், மூப்பர்கள் பரந்த தரிசனத்தையும், ஊழியப்பாதையில் விரிவான விசுவாசத்தை பெற்றுக்கொண்டு இலட்ச, இலட்சமாக பீல் மக்களும் தேவனண்டை வருவார்கள் என்ற உற்சாகத்துடன் பணித்தளத்திற்கு திரும்பினார்கள். மெய்யாகவே இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா குஜராத்திற்கும், ஷாலோம் ஊழியத்திற்கும் மிகப் பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது. **இயேசு அழைக்கிறார்** ஊழியங்களுக்காகவும், **Dr. பால்தினகரன்** அவர்கள் குடும்பத்திற்காகவும் தேவனைத் துதிப்போம்.

### 5. மருத்துவ முகாம்

இந்த ஆண்டில் தாகோத், சோட்டா உதய்பூர், அந்தர்வேலியா, கும்பூரா, பிஜல்பூர் ஆகிய 5 இடங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாம்களின் மூலம் 1000க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்தனர். **Dr. Abel, Dr. Inbakumar, Dr. Jolly Abel** மற்றும் குழுவினர்கள் வந்து 5 நாட்களாக இந்த பணியினை நிறைவேற்றினார்கள்.

## V. ஆராதனைகள்

### 1. ஞாயிறு ஆராதனை

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்த அனைத்து சபைகளிலும் வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனை நடைபெறும்படியாய் கிருபை செய்தார். போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் இந்த ஆராதனையை பொறுப்போடு நிறைவேற்றினார்கள்.

### 2. துதி ஆராதனை

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை முக்கிய ஊழியக்காரிகளாக 70 பேர் கூடி தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து மாலை 6 மணி முதல் இரவு 11 வரை தொடர்ந்து 5 மணி நேரம் துதி ஆராதனை செய்தார்கள். இதில் இவர்கள் நடனமாடி தேவனை துதித்து, ஆவியில் நிறைந்து தேவனை ஆராதிக்கும் போது பரலோகம் இறங்கி வந்ததைப் போல் அனுபவத்தினைப் பெற்றார்கள் இந்த ஆராதனையில் அநேகர் அற்புத சுகம் பெற்று ஆவியில் உற்சாகமடைந்தார்கள்.

### 3. ஞானஸ்நான ஆராதனை

கடந்த ஆண்டில் மூன்று மாநிலங்களிலும் சுமார் 7000 பேர் புதிதாக இயேசுவை ஏற்று ஞானஸ்நானம் பெற்றனர்.

### 4. திருவிருந்து ஆராதனை

ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் திருவிருந்து ஆராதனையாக ஆசரிக்கப்பட்டு வருகிறது. போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள் இதை நடத்துகிறார்கள்.

## VI. விழாக்களும் கொண்டாட்டங்களும்

### 1. ஷாலோம் மிஷன் ஞாயிறு (Shalom Mission Sunday)

கடந்த அக்டோபர் 28, நவம்பர் 4,11 ஆகிய தேதிகளில் Guj, MP, Raj முறையே SLM Mission Sunday நடைபெற்றது. விசுவாசிகள் மிகவும் உற்சாகமாகக் கொண்டாடி, கவர் காணிக்கையை செலுத்தினார்கள். 2012–ல் அனைத்து சபைகளும் கொடுத்த காணிக்கை மொத்தம் 20 இலட்சம் ஆகும். சொந்த ஜனம் இயேசுவை அறிய வேண்டும் என்றும், ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருக வேண்டும் என்றும் காணிக்கை கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதிலிருந்து இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்காக ஷாலோம் ஊழியர்கள் காணிக்கையாக 1 இலட்சமும், Vision India ஊழியத்திற்கு 1 இலட்சமும் காணிக்கையாக கொடுக்கப்பட்டது.

### 2. ஷாலோம் அற்புத திருநாள் (Shalom Miracle Day)

2012–ம் ஆண்டில் டிசம்பர் 21ம் தேதி Shalom Miracle Day நடத்தப்பட்டது. எல்லா சபைகளிலும் புதிய ஆத்துமாக்களை தேவன் கொண்டு வந்து பெரிய பெரிய அற்புதங்களைச் செய்தார். **பிஷப். தேவதாஸ்** அவர்களும், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் ஜெபித்து ஜெப எண்ணெயை ஊழியர்களுக்கு கொடுத்து அனுப்பினார்கள். சுமார் 4000க்கும் அதிகமான அற்புதங்களை ஒரே நாளில் தேவன் நடத்தினார்.

### 3. ஷாலோம் திருமண்டல நாள் (SLM Diocese Day)

கடந்த நவம்பர் 20ம் தேதி SLM Diocese Day மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது. ஷாலோம் சபையின் மூப்பர்கள் மற்றும் விசுவாசிகளும் இந்த நாளை பொன்னான நாளாக கருதி சந்தோஷமாய் கொண்டாடினார்கள்.

### 4. சிறுவர் ஞாயிறு (Children Sunday)

கடந்த மே மாதம் 20–ம் தேதியை அனைத்து சபைகளிலும் சிறுவர் ஞாயிறாக கொண்டாடினார்கள். இந்த நாளில் ஆரம்ப ஜெபம், ஆராதனை, வேத வாசிப்பு, செய்தி வேளை போன்ற முழு பொறுப்புகளையும் சிறுவர்களே ஏற்று நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### 5. CBC நிகழ்ச்சி (Programme)

2012–ம் ஆண்டில் "எனது அழகான இருதயம்" என்ற தலைப்பில் மே மாதம் 10 நாட்கள் CBC வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 30,000 பிள்ளைகள் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெற்றார்கள். இதில் கிராமங்களில் உள்ள விசுவாசிகள் அல்லாத குடும்பத்தில் உள்ள பிள்ளைகளும் பங்கு பெற்று இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

**6. அறுப்பின் பண்டிகை (Harvest Festival)**

கடந்த நவம்பர் மாதம் 25ம் தேதி 3 இராஜ்யங்களிலும் அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. விசுவாசிகள் தங்களின் விளைவின் முதற்பலனிலிருந்து தசமபாகமாக தானியங்களை ஆலயத்திற்கு காணிக்கையாக கொண்டு வந்து தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

**7. உயிர்த்தெழுந்த திருநாள் (Easter)**

இயேசுவின் உயிர்த்தெழுதலை உண்மையாய் உணர்ந்து மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள். 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்து, ஆயத்தமாகி Easter-ஐ கொண்டாடினார்கள். எல்லா சபைகளிலும் இந்த ஆராதனை நடத்தப்பட்டது.

**8. ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம்**

2012 நவம்பர் 15,16,17 ஆகிய 3 தேதிகளில் பரூச் என்ற நகரத்தில் நர்மதா நதி கரையோரத்தில் அமைந்துள்ள Spiritual Life Centre-ல் வைத்து சிறப்பு ஊழியர்கள் குடும்ப முகாம் நடைபெற்றது. இதில் 521 ஷாலோம் ஊழியர்கள் குடும்பமாக பங்கு பெற்றனர். சுமார் 1000க்கும் மேலாலோர் வந்திருந்தனர். 15–ம் தேதியன்று **பாஸ்டர். விஜய்** (மும்பை) அவர்கள் விசேஷித்த செய்தி அளித்தார்கள். **பாஸ்டர். டேனியல்** (மும்பை) அவர்கள் வந்து சிறப்பு ஆராதனைகளை நடத்திக் கொடுத்தார்கள். 16,17ம் தேதிகளில் **சகோ. மோகன். சி. லாசரஸ்** அவர்கள் இயேசு விடுவிக்கிறார் (நாலுமாவடி) குழுவினர்களோடு வந்து ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

**பாஸ்டர். ஆல்வின் தாமஸ்** (சென்னை) அவர்கள் சிறப்பு ஆராதனை மற்றும் செய்தி கொடுத்து ஊழியர்களை ஆராதனை அபிஷேகத்திற்குள்ளாக நடத்தினார்கள். **சகோ. சாம் ஜெபராஜ்** அவர்கள் மற்றும் **சகோ. ஜெபசிங்** அவர்களும் தேவனுடைய வார்த்தையை ஊழியர்களுக்கு கொடுத்தார்கள். 3 மாநிலங்களிலுள்ள ஊழியர்கள் கலாச்சார நடனம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பாக 521 ஊழியர்கள் குடும்பத்திற்கு ஊழியர்களுக்கு Travel Bag -ம், ஊழியர்களின் மனைவியர்களுக்கு Hand Bag -ம் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இறுதியில், விசேஷித்த அபிஷேக கூட்டத்தை **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் நடத்தித் தந்தார்கள். **பிஷப். தேவதாஸ்** அவர்கள் திருவிருந்து ஆராதனையை நடத்தினார்கள். ஊழியர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் பெலனடைந்து, ஜெப விண்ணப்பத்தின் ஆவி, அபிஷேகத்தைப் பெற்று புதிய தரிசனத்துடன் திரும்பினார்கள்.

**9. கிறிஸ்துமஸ் பண்டிகை சிறுவர்கள் கொண்டாட்டம்**

குஜராத் ஊழியக்காரர் பிள்ளைகளுக்கும் மற்றும் நாம் தாங்குகிற ஆதிவாசி பிள்ளைகளுக்கும் **கிறிஸ்துமஸ் சிறுவர் நிகழ்ச்சி** தாகோத்தில் வைத்து டிசம்பர் **19ம்** தேதி நடைபெற்றது. மத்திய பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் அந்தர்வேலியாவில் சிறப்பு மண்டபம் அமைக்கப்பட்டு டிசம்பர் 17ம் தேதி கொண்டாடப்பட்டது. CDC-Jeri குஜராத், சிறுவர்களுக்கு ஜெரி கிராம தேவாலயத்தில் வைத்து விசேஷித்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ. ஜெயராஜ்** ஆகியோர் தலைமையில் நடத்தப்பட்டது. CDC -Hirola (Guj) பிள்ளைகளுக்கு ஹிரோலா தேவாலயத்தில் வைத்து டிசம்பர் **16ம்** தேதி விசேஷித்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை **பிஷப். தேவதாஸ்** அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்கள். CDC-Antherveliya (MP) அந்தர்வேலியாவில் மண்டபம் அமைத்து டிசம்பர் **16ம்** தேதி விசேஷித்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. **சகோ. டைட்டஸ்** அவர்கள் தேவசெய்தியை அளித்தார்கள். Bijalpur (Raj) Children–க்கு டிசம்பர் **15ம்** தேதி பிஜல்பூர் பள்ளியில் வைத்து விசேஷித்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் அல்பா மிஷன், பரோடாவிலிருந்து ஊழியர்கள் வந்து சிறப்பு செய்தியை அளித்து பிள்ளைகளை மகிழ்வித்தார்கள்.

**10. கிறிஸ்துமஸ் நற்செய்தி மேளா**

இராஜஸ்தானில் டிசம்பர் **18ம்** தேதி சபைகள் எல்லாம் கூடி தேவன் நமக்கு தந்துள்ள சத்திரகூட்டா நிலத்தில் வைத்து ஒரு நாள் முழுவதும் கிறிஸ்துமஸ் மேளா கொண்டாடப்பட்டது. இதிலும் அநேக கிராமத்தில் உள்ள மக்கள் திரளாய் கூடி வந்தார்கள். இதில் இராஜஸ்தானிலுள்ள அமைச்சர் மனைவி பங்கேற்று மக்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைக் கூறினார்கள். இதில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து சிறப்பு செய்தியை அளித்தார்கள்.

**11. கிறிஸ்துமஸ் ஆராதனை மற்றும் கொண்டாட்டம்**

கிறிஸ்துமஸ் அன்று தங்கள் தங்கள் கிராமத்தில் அனைவரையுமே சபைக்கு அழைத்து கொண்டாடினார்கள். எல்லா சபைகளுமே நிறைந்து வழிந்தது. மக்கள் திரளாய் வந்து கிறிஸ்துமஸ் கொண்டாடினார்கள். வந்திருந்த அனைவருக்கும் ஆலயத்தில் விருந்தளிக்கப்பட்டது. அநேக சபைகளில் 1000, 1500, 2000 என ஜனங்கள் கூடி வந்தார்கள். அநேக சபைகளில் கிராம மக்கள் முழுவதையும் அழைத்தார்கள். அதில் இயேசுவை அறியாத மக்களும் கூட ஆலயத்தில் வந்து கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடினார்கள். மத்திய பிரதேசத்தில் உள்ள MLA சேவியர் மேடா அவர்கள் சுமார் 20 சபைகளுக்கு 50 கிலோ அரிசி வழங்கினார்கள். மக்கள் அதிக உற்சாகமடைந்தார்கள்.

## VII. Project

**1. Hostel Projects:**

IPM Mission - Jhalod (Guj) – ல் 21 பிள்ளைகளும்,

Shalom Hostel - Dahod (Guj) – ல் 13 பிள்ளைகளும்,

SCM Hostel - Gadwada (MP) – ல் 45 பிள்ளைகளும்,

SCM Hostel - Harinagar (MP) – ல் 35 பிள்ளைகளும்,

SCM Hostel - Bijalpur (Raj) – ல் 182 பிள்ளைகளும்,

SCM Hostel - Goika (Raj) – ல் 32 பிள்ளைகளும்,

SCM Home - Gujarat – ல் 139 பிள்ளைகளும்,

SCM Home - Madhya Pradesh – ல் 152 பிள்ளைகளும்,

SCM Home - Rajasthan – ல் 328 பிள்ளைகளும்,

ஆக மொத்தம் 947 பிள்ளைகளை நாம் தாங்கி வருகிறோம். பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள்.

**2. ஷாலோம் பள்ளி (Shalom School) Project**

கடந்த 11 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளி பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். இங்கு 8–ம் வகுப்பு வரை வகுப்புகள் உள்ளது. சுமார் 325 பிள்ளைகள் கல்வி பயிலுகிறார்கள். படிப்பிலும், விளையாட்டிலும் மற்றும் ஒழுக்கத்திலும், வேதத்திலும் முன்னேறி வருகிறார்கள். ஆசிரியர்களும் நன்கு அர்ப்பணிப்போடு தங்கள் பணியைச் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஞாயிறு பள்ளி ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிறது. தினமும் காலையில் வேதபாட தியானமும் நடைபெற்று வருகிறது. வருடத்திற்கு ஒருமுறை இந்த பிள்ளைகளுக்கு முகாம் நடத்தப்படுகிறது.

**3. Child Development Centre (CDC) Project**

'Compassion India' மூலமாக நாம் நடத்தி வரும் CDC - யில் CDC - Hirola (Guj) – ல் 248 பிள்ளைகளும், CDC - Jeri (Guj) – ல் 198 பிள்ளைகளும் CDC - Anthervelia (MP) - ல் 282 பிள்ளைகளும்

ஆக மொத்தம் 728 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, டியூசன் மற்றும் எல்லா வசதிகளும் கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடத்தில் இந்த பிள்ளைகள் சுற்றுலா பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு முகாம்கள் நடத்தப்பட்டன. இங்கு இசைப் பயிற்சி, ஆவிக்குரிய பயிற்சி, தையல் பயிற்சி அனைத்தும் கற்றுக் கொடுக்கப்பட்டன. CDC Jeri பிள்ளைகளுக்கு (Personality Development Training) ஆளுமை வளர்ச்சிப் பயிற்சி நடத்தப்பட்டது.

மத்தியப் பிரதேசத்திலுள்ள மற்ற ஸ்தாபனங்களை சேர்ந்த CDC Project –ல் உள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளும், பாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. இதில் நமது ஷாலோம் பிள்ளைகள் விளையாட்டில் முதல் பரிசும், பாட்டு போட்டியில் இரண்டாவது பரிசும் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**4. Child Survival Programme (CSP) Project**

'Compassion India' ஸ்தாபனத்துடன் இணைந்து நாம் நடத்தி வரும் CSP - Hirola (Guj) வில் **49** கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் **3** வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும், CSP - Anthervelia (MP) வில் **54** கர்ப்பிணி பெண்களுக்கும் **3** வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும், உடல் நலம் பேணும் பணி நடைபெற்று வருகிறது.

அதாவது கருவிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும், நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படவும், தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகளும், சத்துணவுகளும் இந்த சேவை மூலமாக வழங்கப்படுகின்றன. இந்த சேவை மூலம் கிராமங்களில் உள்ள விசுவாசி மற்றும் விசுவாசியல்லாத கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவி செய்து வருகிறோம்.

**5. ICT Project (Institute Of Community Transformation)**

**"சேவா பாரத்"** ஸ்தாபனம் மூலமாக கடந்த வருடம் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் **2** ICT Project முறையே மொத்தம் **6** ICT Project-கள் கிடைக்கப்பெற்று **60** இளம் ஊழியர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றார்கள். இந்த **6** ICT Project-க்கும் B.Th படித்த நம்முடைய பாஸ்டர்கள் Director-ஆகவும் மற்றும் Tutors ஆகவும் இருந்து இந்த ICT Project-யை மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இந்த பயிற்சி பெற்ற ICT Students-களுக்கு, செகந்திராபாத்திலும், குஜராத், ஆனந்திலும் வைத்து பட்டமளிப்பு நிகழ்ச்சி நடைபெற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**6. ஒலிநாடாக்கள் (CD'S)**

கடந்த ஆண்டிலும் பாடல்கள் 2 Audio CD வெளியிடும்படியாய் ஆண்டவர் கிருபை கொடுத்தார். ஒன்று சிறுவர்களுக்கென்று CBC பாடல்கள் **"எனது அழகான இருதயம்"** என்ற தலைப்பிலும் மற்றும் வாலிபர்களுக்கென்று சிறப்பு CD **"Hey Friend"** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

**7. குடிநீர் வசதித் திட்டம் (Hand Pumps)**

CBN ஸ்தாபனம் மூலமாக ஒவ்வொரு ஆண்டும், பீல் ஜனங்கள் வசிக்கும் இடங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு போடப்பட்டு, கைப் பம்புகள் தரப்படுகின்றன. கடந்த ஆண்டில் மத்தியப் பிரதேசத்தில் வண்டிகள் கூட போக முடியாத உள்ளடங்கிய **25** கிராமங்களில் கர்த்தருடைய ஒத்தாசையினால் சிறந்த முறையில் ஆழ்குழாய் பம்புகள் போடப்பட்டன. எல்லா இடங்களிலும் நன்றாக தண்ணீர் கிடைக்கப்பெற்று ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**8. முதியோர்கல்வித் திட்டம் (ALP Project)**

**"சேவா பாரத்"** ஸ்தாபனத்துடன் இணைந்து முதியோர் கல்வித்திட்டம் 2011ல் ஆரம்பித்து 2012ம் ஆண்டு முடிவடைந்தது. மத்தியப் பிரதேசத்தின் 50 மையங்களிலும், குஜராத்தின் 10 மையங்களிலும் நடைபெற்றன. 60 கிராமங்களில் உள்ள நம் சபையின் விசுவாசிகள் இதன் மூலம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். அதன்பின் முதியோர் கல்வித் திட்ட நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

**9. 10 இலட்ச ஆத்தும அறுவடைத் திட்டம் (One Million soul Project)**

விசேஷமாய் தேவன் தேர்ந்தெடுத்து , இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடியில் பயிற்சி பெற்ற 48 ஊழியர்கள் குடும்பமாக, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சுகமளிக்கும் கூட்டம் நடத்துகிறார்கள். இதில் 48 ஊழியர்கள் 2, 2 குடும்பமாக பிரிக்கப்பட்டு 24 குழுவாக ஊழியம் செய்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 12 முதல் 15 இடங்களில் கூட்டம் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாதமும் 50லிருந்து 60 இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகிறது. தேவன் இந்த ஊழியர்களை வல்லமையாய் பயன்படுத்தி, அற்புத அடையாளங்களுடன் நடத்தி வருகிறார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் புதிய ஆத்துமாக்கள் வருகிறார்கள்.

இது வரை கடந்த ஆண்டு 2 வருடங்களில் 699 கிராமங்களில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கு பெற்றவர்கள் மொத்தம் 76,561. இதன் விளைவாக 2701 புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 6538 பேர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுள்ளார்கள். 6599 அற்புதச் சாட்சிகளை தேவன் நடத்தியுள்ளார். நிச்சயம் 2015–க்குள் இக் கூட்டங்கள் மூலமாய் 10 இலட்சம் ஆத்துமாக்கள் தேவனண்டை வந்து விடுவார்கள் என்று முழுமையாக விசுவாசிக்கிறோம்.

நவம்பர் மாதத்தில் **சகோ. மோகன் சி. லாசரஸ்** பணித்தளத்திற்கு வந்திருக்கும்போது இந்த Project-க்கு என்று 4 TATA Magic வாகனம், 4 Amplifier, 8 Speakers, 12 Mikes, 4 Photo Cameras 4 Generator களும் ரூ. 22 இலட்சங்கள் மதிப்பில் **இயேசு விடுவிக்கிறார்** ஸ்தாபனத்தின் மூலமாக ஜெபித்து வழங்கினார்கள்.

**10. Bible Society Award (Bible Distribution)**

ஒவ்வொரு வருடமும் Gujarat Bible Society யிலிருந்து வேதாகமம் அதிகமாய் விநியோகித்த ஸ்தாபனத்திற்கு விருது கொடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்திற்கு அந்த விருது கிடைப்பது மிக சந்தோஷமான காரியம். 2012–லும் சுமார் 3000 பைபிளுக்கு மேலாக வாங்கி விநியோகிக்கப்பட்டது. ஆகையால் இந்த வருடமும் Bible Society யிலிருந்து விருது நமக்கு கிடைக்கப்பெற்றது. தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

## VIII. சபை ஸ்தாபித்தல்

### 1. சபை ஸ்தாபித்தல் ஊழியம்

கடந்த ஆண்டில் குஜராத்தில் **பாட்டன்பூரா, குந்திக்கேடா, தனுஷியா** ஆகிய கிராமங்களிலும், மத்தியப் பிரதேசத்தில் **சூலியா, தேவ்கா, காலாகேத், கோபால்பூரா, முண்டத், ரூப்பாகேடா, மால்பாடா, பாண்டாகாப்பர், பான்தா, காலாகூட்டா** ஆகிய கிராமங்களிலும், இராஜஸ்தானில் **சபல்புரா, காட்டா, ரோகன்யாமன்னா, பட்டார், டாடாவட்லா** ஆகிய கிராமங்களிலும் மொத்தம் 18 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இன்னும் குஜராத்தில் **கரம்பா, போர்டி, ஜாம்லா** ஆகிய கிராமங்களிலும், மத்தியப் பிரதேசத்தில் **மாண்ட்லி, பாண்டிசேரா, சாதேடா, கால்கண்ட்வி, ஜாபாதாரா, நாங்கன்வட்** ஆகிய கிராமங்களிலும், இராஜஸ்தானில் **மகர்தா, காச்சலா, டும்மட், மாஜியா, இட்டாலா, படுவேல்** ஆகிய கிராமங்களிலும் இவற்றில் 8 ஆலயங்கள் பிரதிஷ்டை செய்ய ஆயத்தமான நிலையிலும், 7 ஆலயங்கள் முடிக்கும் நிலையில் உள்ளன. மொத்தம் கடந்த வருடத்தில் 33 கிராம ஆலயங்கள் தேவ நாம மகிமைக்காக கட்டப்பட்டுள்ளது. சிறிய ஆலயங்கள் எல்லாம் பெரிய ஆலயங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் உடனடியாக 100 ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்.

### 2. சபை ஒருங்கிணைப்பு ஊழியம்

வளர்ந்து வரும் Sharing Love Mission ஊழியத்தில் சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகி வரவே இதையெல்லாம் ஒழுங்கும் கிரமமாய் ஒருங்கிணைத்து செயல்படும்படியாய் சபை ஒருங்கிணைப்பு ஊழியம் 2011–ல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு **சகோ. கார்த்திக்** மற்றும் **சகோதரி ஏஞ்சல் கார்த்திக்** ஆகியோருடன் மேலும் இரண்டு ஊழியர்கள் இணைந்து மிகவும் சிறப்பாக இந்தப் பணிகளை நிறைவேற்றினார்கள். தற்போது இந்தப் பணிகளை **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** ஆகியோர் செய்து வருகின்றனர்

## IX. இலக்கிய ஊழியம்

### 1. வேத பாட பரீட்சை

2012–ல் ஊழியர்களுக்கும், ஊழியக்கார பெண்களுக்கும் வேத பாடப் பரீட்சை நடத்தப்பட்டது. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள **“பயப்படாதே”** என்றும் அதோடு அதே அர்த்தம் கொள்ளும் மற்ற வார்த்தைகளும் அடங்கிய 154 வேதவசனங்களை தெரிந்தெடுக்கப்பட்டு, ஒரு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு, அவர்கள் கரங்களில் கொடுக்கப்பட்டன. இந்த வசனங்களை மனப்பாடமாக படித்து ஊழியர்கள் எழுத்து பரீட்சையாகவும், ஊழியக்காரிகள் மனப்பாடமாக ஒப்புவித்தும் இந்த பரீட்சையில் பங்கு பெற்றார்கள். படிப்பு அறிவில்லாத பெண்களும் மனப்பாடமாக படித்து ஒப்புவித்தார்கள். முழுவசனங்களை ஒப்புவித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டனர்.

**2. B.Th Exam**

2012–ல் நமது ஊழியர்களில் 15 பேர் Allahabad Bible Seminary மூலம் B.Th Exam எழுதினார்கள்.

**3. புத்தாடை அன்பளிப்பு**

நாம் தாங்கி வருகிற பீல் ஆதிவாசி பிள்ளைகள், நமது ஊழியர்களின் பிள்ளைகள், Compassion -மூலம் தாங்கப்பட்டு வருகிற CDC–யில் 728 பிள்ளைகள், CSP Project-யில் படிக்கும் 103 பிள்ளைகள் சேர்த்து மொத்தம் 2761 சிறுவர்களுக்கு புதிய உடைகள் கிறிஸ்துமஸ் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நமது ஷாலோம் ஊழியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் மொத்தம் 521 குடும்பத்திற்கும் கிறிஸ்துமஸ் புத்தாடைகள் வழங்கப்பட்டன. அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**4. Seesha Project**

ஷாலோம் மூலம் தாங்கப்பட்டு வருகிற சிறுவர்களில் 250 பிள்ளைகளுக்கு 2012 டிசம்பரில் "Seesha" இயேசு அழைக்கிறார் மூலம் புத்தாடைகள் வழங்கப்பட்டது.

## X. Visitors

14.01.2012 சனிக்கிழமை அன்று சென்னை Madras Christian College பள்ளியிலிருந்து **திரு. மனோகர்** (தலைமையாசிரியர்) அவர்கள் தலைமையில் 9 ஆசிரியர்கள் குழுவாக வந்து பணித்தளத்தைப் பார்வையிட்டு, குந்திகேடா ஆலயத்தை பிரதிஷ்டைச் செய்ய தேவன் கிருபைச் செய்தார்.

2012 மார்ச் மாதம் 9–13 ஆகிய தேதிகளில் தூத்துக்குடியிலிருந்து **பாஸ்டர். எட்வர்ட் சாம்ராஜ்** அவர்களும், **பாஸ்டர். ராஜாராம்** அவர்களும் பணித்தள ஊழியங்களை பார்க்கும்படியாக வந்தார்கள். அவர்கள் வந்த சமயத்தில் ஞானஸ்நான ஆராதனையிலும், முழு இரவு ஜெபத்திலும், ஆலய பிரதிஷ்டை ஆராதனைகளிலும் கலந்துக் கொண்டு தேவன் வல்லமையாய் பீல் மக்கள் மத்தியில் செயல்படுவதை கண்களால் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

2012 ஏப்ரல் மாதம் 7,8 ஆகிய தேதிகளில் ஷாலோம் ஊழியத்தின் செயற்குழு உறுப்பினர்கள் **சகோ. ஜார்ஜ், சகோ. சுந்தர்ராஜ்** மற்றும் **சகோ. ஜாண் நெல்சன்** ஆகியோர் மார்த்தாண்டம் பகுதியிலிருந்து வந்து பணித்தளத்தை பார்வையிடவும், ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபைச் செய்தார். பணித்தளங்களில் நடக்கும் ஊழியங்களை கண்டு தேவனைத் துதித்தார்கள்.

ஏப்ரல் மாதம் 20 முதல் 23ம் தேதி வரை **பாஸ்டர். ஆமோஸ்** அவர்கள் குழுவாக மார்த்தாண்டத்திலிருந்து பணித்தளத்தை பார்வையிடும்படியாக வந்தார்கள். அவர்கள் பணித்தளத்தை பார்வையிடவும், ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபைச் செய்தார். அவர்கள் பணித்தளத்தில் நடக்கும் வல்லமையான காரியங்களைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் **30** தேதி முதல் மே மாதம் **9** தேதி வரை **10** நாட்கள் MCC பள்ளி ஆசிரியர்கள் சென்னையிலிருந்து நமது பணித்தள ஊழியர்களுக்கு ஆங்கில பயிற்சி கொடுக்கும்படியாக பணித்தளத்திற்கு வந்தார்கள். **10** நாட்கள் ஊழியத்தில் அவர்கள் பணித்தளங்களை பார்வையிடவும், ஆலயப் பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபைக் கொடுத்தார். பணித்தளங்களில் நடக்கும் ஊழியங்களைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

பணித்தளத்தைப் பார்வையிடும்படியாக தூத்துக்குடியிலிருந்து **சகோ. டேனியல் கிருபாகரன், சகோ. ஃபிராங்களின் பிரபாகரன்** மற்றும் **சகோ. லெஸ்லி ரிச்சர்ட்** ஆகியோர் ஜுன் **15,16** ஆகிய இரண்டு நாட்கள் வந்திருந்தார்கள். அவர்கள் வந்திருந்த சமயத்தில் ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துக் கொள்ளவும் தேவன் கிருபைச் செய்தார். தேவன் பிஷப். தேவதாஸ் அவர்களுக்கு தேவன் கொடுத்த தரிசனத்தையும், அதை தேவன் நிறைவேற்றுகிறதையும் பார்த்து தேவனைத் துதித்தார்கள்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் **26–28** ஆகிய தேதிகளில் ஈரோட்டிலிருந்து **பாஸ்டர். மேனுவேல் தனராஜ்,** அவர்களின் மனைவி **சகோதரி நிர்மலா ஜாய் சகோ. அற்புதராஜ்** மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த **சகோ. ஜெபஸ்டின்** ஆகியோர் ஒரு குழுவாக பணித்தளத்தில் நடக்கும் ஊழியங்களைப் பார்வையிடும்படியாக வந்தார்கள். தேவன் பீல் மக்கள் மத்தியில் செய்யும் அற்புதங்களைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் Finance Dept. ஆலோசகர் **சகோ. பிரேம்குமார்** அவர்கள் (Retd. IOB Chief Manager) குடும்பமாக **2012** செப்டம்பர் **16,17,18** அகிய தேதிகளில் பணித்தளத்தைப் பார்வையிடவும் மேலும் Finance Management குறித்து ஆலோசனைகளையும் கொடுத்தார்கள். தேவன் ஊழியத்தின் மூலம் செய்து வருகிற காரியங்களைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

கடந்த அக்டோபர் **12**ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பீகாரிலிருந்து Born Network லிருந்து **Rev. Dr. S.D பொன்ராஜ்** அவர்களும், **Dr. எலியாஸ்** அவர்களும் நம்முடைய பணித்தளத்தைப் பார்வையிட்டு, ஊழியங்களை அறிந்து கொண்டு தேவனைத் துதித்தார்கள்.

விரிகோடு CSI சபையிலிருந்து **Rev. ஜெயா கார்ல்னிஸ்** அவர்கள் தலைமையில் **சகோ. தங்கசாமி, சகோ. ஜெயசிங், சகோ. சத்தியக்குமார்** ஆகியோரும், **சகோ. அருள்தாஸ்** ( இயேசு ஆறுதல் அளிக்கிறார்) அவர்கள் சார்பில் **சகோ. பென்னட், சகோ. சசி** ஆகியோரும் மற்றும் நமது ஷாலோம் ஊழிய முன்னேற்றப் பணியாளர்

**சகோ. செல்வதுரை** அவர்களும் இணைந்து கடந்த அக்டோபர் மாதம் 12,13,14 ஆகிய தேதிகளில் ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடவும், ஆலயங்களை பிரதிஷ்டைச் செய்யவும் கர்த்தர் கிருபைச் செய்தார். அவர்கள் வந்து தேவன் பணித்தளங்களில் செய்யும் மகத்தான காரியங்களுக்காக தேவனைத் துதித்தார்கள்.

15.12.12 ஞாயிற்றுக்கிழமை பரோடாவிலிருந்து அல்பா மிஷனிலிருந்து **சகோதரி. பிரித்திகா** அவர்கள் தலைமையில் 7 பேர்கள் குழுவாக வந்து இராஜஸ்தான் பிஜல்பூர் பணித்தளங்களைப் பார்வையிடவும், இராஜஸ்தான் பிஜல்பூர் ஷாலோம் விடுதியில் உள்ள அல்பா மிஷன் பிள்ளைகளுக்கான சிறப்பு கிறிஸ்துமஸ் நிகழச்சி நடத்தித் தந்தார்கள். தேவன் ஊழியங்களுக்கு செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதித்தார்கள்.

## XI. குடும்ப ஆசீர்வாதம் மற்றும் பிற ஆசீர்வாதங்கள்

2012 ஆகஸ்ட் 6ஆம் தேதி **பிஷப். தேவதாஸ்** அவர்களின் மூத்த மகன் **சகோ. கிளாட்சன்** டைட்டஸ் அவர்களுக்கும், **சகோதரி. மெர்லின்** அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது. தேவன் திருமணத்தை ஆசீர்வதித்துக் கொடுத்தார். தொடர்ந்து பணித்தளத்திலும் குஜராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்தில் ஷாலோம் சபையின் விசுவாசிகள் சிறப்பு வரவேற்பு கொடுத்து, திருமணத் தம்பதிகளை ஜெபித்து ஆசீர்வதித்தார்கள்.

ஷாலோம் ஊழியர்களை தேவன் 2012–ல் அதிகமாய் ஆசீர்வதித்துள்ளார். மண் வீடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த இவர்களில் அநேகர் நல்ல பெரிய வீடுகள் கட்டி பிரதிஷ்டை செய்தார்கள். மேலும் நமது ஊழியர்களை தேவன் பொருளாதார ரீதியாகவும் ஆசீர்வதித்துள்ளார். நமது ஊழியக்காரப் பிள்ளைகள் மற்றும் நாம் தாங்கி வருகிற பிள்ளைகள் நன்றாக படித்து மேல்படிப்புக்கு வரும்படியாக தேவன் கிருபை செய்துள்ளார்.

ஷாலோம் சபைகளில் சிறிய ஆலயங்களாய் இருந்தவைகள் பல பெரிய ஆலயங்களாக இடித்துக் கட்டப்பட்டுள்ளன. சபையின் மூப்பர்கள் மிகவும் உற்சாகமாய் இந்த காரியங்களில் ஈடுபட்டார்கள். இன்னும் அநேக ஆலயங்கள் பெரிய ஆலயங்களாய் மாறி வருகின்றன.

சமுதாயத்தில் நமது ஊழியர்களுக்கும், சபைக்கும் தேவன் நல்ல மதிப்பைக் கட்டளையிட்டுள்ளார். உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் தேவன் நமக்கு தயவைக் கட்டளையிட்டுள்ளார். விரைவில் 1 கோடி பீல் மக்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்று விசுவாசிக்கிறோம்.

**குஜராத் மாநில முதல்வர் சந்திப்பு**

2012ம் வருடம் பிப்ரவரி மாதம் 4ம் தேதியன்று தாகோத்திற்கு குஜராத் மாநில முதல்வர் **திரு. நரேந்திரமோடி** அவர்கள் வருகை தந்தார்கள். அப்பொழுது **பிஷப். தேவதாஸ்** அவர்களுக்கு முதல்வர் மூலம் கிடைத்த அழைப்பின்படியே முதல்வர் அவர்களை சந்திக்கும் சிலாக்கியத்தை தேவன் கொடுத்தார். மிகவும் சிறந்த முறையில் வரவேற்று கனப்படுத்தினார்கள். தேவனுக்கே மகிமை!

## XII. தமிழக ஊழியங்கள்

**மிஷனெரி பிரதிஷ்டைகள்**

2012ம் வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் மொத்தம் தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் உள்ள சபைகளில் வைத்து நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் 13 பேர் குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடைய போக்கு வரத்து மற்றும் அனைத்து காரியங்களையும் தேவன் பாதுகாத்து தேவைகளை சந்தித்தார். மேலும் ஊழியர்களைத் தாங்க முன்வந்த ஆதரவாளர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை!

**மிஷனெரி தரிசனக் கூடுகை**

2012ம் வருடம் மே மாதம் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் சிவகாசி பட்டணத்தில் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் பிஷப் தேவதாஸ் அவர்கள் தேவ செய்தியினைப் பகிர்ந்து கொண்டார்கள் தேவனுக்கே மகிமை!

**செயற்குழு கூட்டம்**

13.02.2012 அன்று நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து, செயற்குழு கூட்டம் நடைபெற தேவன் கிருபை செய்தார். இதில் ஷாலோம் ஊழிங்களைக் குறித்ததான திட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இதர ஊழியங்கள்**

2012ம் வருடம் முழுவதிலும் அநேக சபைகளில் ஞாயிறு ஆராதனைகளில் துதி ஆராதனைகளை நடத்தவும், ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ளவும், முழு இரவு ஜெபங்களை நடத்தவும், உபவாச ஜெபங்களை நடத்தவும், இதர ஊழியக் கூட்டங்களில் செய்தியளிக்கவும், மாணவர்கள் மற்றும் வாலிபர்களுக்கென்று, சிறப்புக் கூடுகைகளில் செய்தியளிக்கவும், நமது **பிஷப் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோரையும், நமது ஷாலோம் ஊழியர்களையும் கர்த்தர் பயன்படுத்தியமைக்காக தேவனைத் துதிக்கிறோம். தேவனுக்கே மகிமை!

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...




- ❋ நம் தலைமுறையில் முழு பீல்மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்கப்படவும்; 2020க்குள் 7000 கிராமங்களில் 7000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் திருமண்டல சபை பணிகளின் வளர்ச்சிக்காகவும், ஷாலோம் மிஷனெரிப் பணிகளின் திட்டங்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.
- ❋ பணித்தளத்தில் எழும்புகிற சத்துருவின் போராட்டங்கள் நிர்மூலமாகவும், தேவன் ஊழியர்களின் குடும்பங்களுக்கு நல்ல சுகத்தைக் கட்டளையிடவும், ஊழியர்கள் ஞானவரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பப்படவும், பிரயாணங்களில் பாதுகாவலை தேவன் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் ஊழியங்களை நேசித்து தாங்கும் ஊழிய ஸ்தாபனங்கள், சபைகள் மற்றும் விசுவாச குடும்பத்தார்களை தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிக்க மற்றும் ஷாலோம் பிரதிநிதிகள் மற்றும் Board member-களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- ❋ தூத்துக்குடி தலைமை அலுவலக பணியாளர்கள் குடும்பங்கள், குஜராத் தாகோத் பணித்தள அலுவலக பணியாளர்கள் குடும்பங்கள், முன்னேற்றப் பணியாளர்கள் குடும்பங்கள், பணித்தளத்தில் Project பணியாளர்கள் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் தேவன் ஒவ்வொருவரையும் வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**பிப்ரவரி மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்**

- ❋ பிப்ரவரி 4 ம் தேதி ஷாலோம் செயற்குழு கூடுகையும், 5ம் தேதி ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு கூடுகையும் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் வைத்து நடைபெறவிருக்கிறது. கூடுகையில் நிறைவேற்றப்படும் எதிர்கால ஊழியத் திட்டங்களையும் தீர்மானங்களையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- ❋ பிப்ரவரி 17ம் தேதி பாளை B.G.O.B. காலனி CSI சபையில் நடைபெறும் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையைத் தேவன் ஆசீர்வதிக்கவும், பிரதிஷ்டை செய்யப்படும் 5 ஊழியர் குடும்பத்திற்காவும் அவர்களின் பிரயாணத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- ❋ பிப்ரவரி 23, 24 ஆகிய தினங்களில் விரிகோடு CSI சபையில் நடைபெறும் கன்வென்சன்களி தேவ செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள்.
- ❋ பிப்ரவரி 24ம் தேதி மாலை மார்த்தாண்டம் CSI சபை வளாகம், சிங்ளோர் ஹாலில் நடைபெறும் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகைக்காக ஜெபியுங்கள். இதில் தேவ ஆவி வல்லமையாக ஊற்றப்படவும், அநேக புதிய ஆதரவாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஷாலோம் ஊழியங்களுக்கு எழும்பவும் ஜெபியுங்கள்.

# 2013 B i ¥tLô]
# T¦ jR[ §hPeLs




- ★ 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்புதல்.
- ★ 300 புதிய ஆராதனை குழுக்கள் (சபைகள்) உருவாக்குதல்.
- ★ 6,000 சபை மூப்பர்களுக்கான 2 நாட்கள் சிறப்புக் கூடுகை, 300 பேர்களாக – 20 முகாம்கள்
- ★ 5,000 வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக ‑ 20 முகாம்கள்.
- ★ 10,000 சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக ‑ 25 முகாம்கள்.
- ★ 600 ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி (4 மாதங்களுக்கு ஒருமுறை).
- ★ 25,000 பெண்களுக்கான சிறப்பு முகாம்கள் 1000 பேர்களாக – 25 முகாம்கள்
- ★ 300 திருமண்டல தலைமை போதகர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி முகாம்கள் – 75 பேர்களாக – 4 முகாம்கள்.
- ★ 30,000 இளம் சிறார்களுக்கான CBC (VBS) 10 நாட்கள் வகுப்பு மற்றும் (மே மாதம்) 1,000 CBC ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி.
- ★ 30 தாலுகாக்களில் ஜெப முகாம் நடத்துதல் (முழு தாலுகாவின் இரட்சிப்பிற்காக)
- ★ 200 கிராம ஆலயங்கள் கட்டப்படுதல்.
- ★ 600 கிராமங்களில் சிறப்பு எழுப்புதல் மற்றும் சுகமளிக்கும் கூட்டங்கள் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் 12 இடங்களில் 50 வாரங்கள் நடத்துதல்.
- ★ 2 மாநிலங்களில் (ம.பி, குஜராத்) ஷாலோம் ஆத்மீக பயிற்சி நிலையம் (Shalom Spiritual Life Centre) உருவாக்குதல்.
- ★ 1 ஷாலோம் வேதாகமப் பள்ளி (ஜுலை 1) ஆரம்பித்தல். **(Shalom Bible Institute)**
- ★ 24 மணி நேரமும் கர்த்தரிடம் விண்ணப்பிக்கும்படியாக ஜெப கோபுரம் தாகோத், குஜராத்தில் கட்டுதல்.
- ★ ஆடியோ, வீடியோ மூலமாக ஹிந்தி, குஜராத்தி மற்றும் பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், செய்திகள் வெளியிடுதல்.
- ★ ஷாலோம் ஆவிக்குரிய எழுப்புதல் பத்திரிக்கை குஜராத்தி, ஹிந்தி மொழிகளில் வெளியிடுதல் மற்றும் ஆவியானவர் தரும் இதர ஊழியங்கள்.

# 2013 §hPeLû [
# ¨û\úYt\úRûYLs



- **மாதம் ரூ.2000/–** ஜெபித்து கொடுத்து **200 சுதேச ஊழியர்களை** ஜெபித்து தாங்குவோர் தேவை.
- **ரூ.2 இலட்சம்** அல்லது **ரூ.1 இலட்சம்** நிதி உதவி கொடுத்து **200 கிராமங்களில் ஆலயம்** கட்டித்தரும் நிதியாளர்கள் தேவை.
- **ரூ.100/– வீதம்** கொடுத்து **வேதபுத்தகங்கள்** வழங்குவோர் தேவை. (இவ்வருடம் **10000 ஹிந்தி, குஜராத்தி** வேதபுத்தகங்கள் தேவை)
- **ரூ. 50/– வீதம்** கொடுத்து வாலிபர்களுக்கு **புதிய ஏற்பாடு** வழங்குவோர் தேவை. (இவ்வருடம் **5000 புதிய ஏற்பாடுகள்** தேவை)
- **மூப்பர்கள் முகாம், வாலிபர்கள் முகாம், ஜெப முகாம், சிறுவர் முகாம், பெண்கள் முகாம், சிறுவர் ஊழியம், ஒய்வுநாள் பாடசாலை ஊழியம், தலைமை போதகர்கள் முகாம், புதிய ஊழியர்கள் பயிற்சி முகாம், வேதபாடசாலை இலக்கியப் பணிகள்.**
- மேற்கண்ட பணிகளை செயல்படுத்த மொத்தம் **ரூ. 60 இலட்சங்கள்** தேவை. அதாவது **மாதந்தோறும்** தவறாது **ரூ. 1000/–** ஜெபித்து கொடுத்து தாங்குகிற **ஷாலோம் மிஷனெரி ஊழிய பங்காளர்கள் 500 பேர்கள்** தேவை.
- **ஷாலோம் பணித்தள கட்டிடம், பயிற்சி கூடங்கள், வேதாகம பாடசாலை** போன்ற கட்டிட திட்டங்களுக்காக உதவ முன்வரும் சிறப்பு நிதியாளர்கள் தேவை.
- மூத்த தலைவர்களுக்கு ஊழியங்களை விரைவாக நடத்த **ரூ. 40,000/– மதிப்பில் மோட்டார் சைக்கிள்** வாகன ஆதரவாளர்கள் 30 பேர்கள் தேவை
- புதிய சுதேச ஊழியர்கள் **200 பேருக்கு** மிதிவண்டி **ரூ. 3000/– மதிப்பில்** கொடுக்கும் ஆதரவாளர்கள் தேவை.
- மாதந்தோறும் **தங்களால் இயன்ற** காணிக்கையை உற்சாகத்துடன் தந்து ஜெபித்து தாங்குவோர் தேவை
- இம்மாபெரும் தரிசனப்பணியை நிறைவேற்ற துரிதப்படுத்த ஒவ்வொரு ஊர்களிலும், ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்தி ஜெபத்துடன் காணிக்கை சேகரித்து அனுப்பும் **ஷாலோம் பிரதிநிதிகள் 300 பேர்கள்** தேவை.

# *10 இலட்சம் ஆத்தும ஆதாயப் அறுவடைத் திட்டத்தின் மூலமாக நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தின் சில சாட்சிகள்*



**பெயர் : பங்லி பேன் புரியா**

**கிராமம் : பேர், குஜராத்**

எனக்கு 15 வருடங்களாக வயிற்றில் கட்டி இருந்தது. குணமாவதற்காக மந்திரவாதிகளிடம் சென்று அநேக மந்திரம் செய்தும், ஆடு கோழி போன்றவற்றை பலியிட்டும் குணமாகவில்லை. ஆனால் கட்டியின் அளவு பெரிதாகிக் கொண்டிருந்தது. டாக்டரிடம் சென்றும் மருந்துகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. பின்பு குஜராத்திலுள்ள பாட்டன்புரா கிராமத்தில் உள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் மத்திய பிரதேசத்திலிருந்து போதகர்.ராலுசிங் ஹட்டிலா அவர்கள் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த போது உடனே எனது வயிற்றில் இருந்த கட்டி மறைந்தது. இப்போது நான் சுகமாக உள்ளேன்.

---



**பெயர் : ஜமீலா பேன்**

**கிராமம் : மச்சாரா சாத், இராஜஸ்தான்**

எனக்கு கடந்த 3 மாதமாக தொண்டையில் பயங்கரமான வலி இருந்தது. என்னால் தண்ணீர் கூட குடிக்க முடியவில்லை. மருத்துவமனைக்குச் சென்று செலவு செய்து மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. கும்புரா சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். தேவ ஊழியர் ஜெபிக்கும் போது, எனது தொண்டையில் இருந்து வலியினை தேவன் எடுத்துப் போட்டார். உடனே நான் சோதிக்கும்படியாக தண்ணீர் குடித்துப் பார்த்தேன் என்னால் நன்றாக தண்ணீர் குடிக்க முடிகிறது. தேவனுக்கே மகிமை!

---



**பெயர் : செமன் டாமோர்**

**கிராமம் : பிப்லா, மத்தியப்பிரதேசம்**

நான் சூரத்தில் கூலி வேலை செய்து வந்தேன். அங்கு வேலை செய்யும் போது ஜல்லி, சிமெண்ட் கலக்கும் கலவை இயந்திரம் என் கால் மீது விழுந்து விட்டது. உடனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் போது மருத்துவர் இனி மேல் என்னால் எழும்பவோ நடக்கவோ முடியாது என்று கூறி விட்டார்கள். மிகவும் கவலையோடு இருந்த போது, பிப்லாவில் உள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். அந்தக் கூடுகையில் **சகோ. ஜீனு மாவி** அவர்கள் தேவ செய்தியளித்து, ஜெபிக்கும் போது எனது கால்களில் தேவ வல்லமை இறங்கியது. இப்போது என்னால் எழும்பவும் நடக்கவும் முடிகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓûL

| | |
|---|---|
| நாள் : **01.02.2013 (வெள்ளி)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| | |
|---|---|
| நாள் :<br>**16.02.2013 (சனிக்கிழமை)** | நேரம் :<br>**அதிகாலை 12.00 மணி முதல்<br>மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை<br>24 மணிநேரம்** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **09.02.2013,<br>சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல்<br>7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

மார்த்தாண்டத்தில்

# ஷாலோம்

# மிஷனெரி தரிசனக் கூடுகை

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

| நாள் | நேரம் |
|---|---|
| **24.02.2013** | **மாலை 5.00 மணி** |


இடம்

**சிங்ளேர் ஹால்,**

**CSI ஆலய வளாகம்,** மார்த்தாண்டம்

தலைமை : **Rev. A. வில்லியம் தாமஸ்**

(மார்த்தாண்டம் சேகர போதகர்)



தேவ செய்தி : **பேராயர் V. தேவதாஸ்**

(அன்பு பகிர்வு இயக்கம், குஜராத்)

- சுதேச ஊழியர்களின் சாட்சி நேரம்...
- மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை...
- அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...

**குடும்பமாக கட்டாயம் வாருங்கள்! உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிமுகம் செய்து அழைத்து வாருங்கள்!!**

தொடர்புக்கு : –

**SHARING LOVE MISSION** (Branch)

**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்.

**Cell : Bro. Selvam** : 9487689869, **Bro. George** : 94439-93423, **Bro. Kingbert** : 94868-64820

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ஆராதனா டாமோர்** |
| தந்தையின் பெயர் | : | ரமேஷ் டாமோர் |
| தாயார் பெயர் | : | பிஜீ டாமோர் |
| பிறந்த நாள் | : | 01.11.2006 |
| படிக்கும் வகுப்பு | : | 1st Std |
| சொந்த ஊர் | : | தோரணியா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–**

இவளுடைய தந்தை சகோ. ரமேஷ் டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் அனைத்து விதமான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு சமாதானமில்லாமல் வாழ்ந்து வந்தார். மேலும் அசுத்த ஆவிகளை வணங்கியதால் அவற்றின் பிடியில் அவரது குடும்பம் சிக்கி வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தது.

இந்த சூழ்நிலையில் பக்கத்துக் கிராமத்தில் ஊழியம் செய்து வரும் ஷாலோம் ஊழியரைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரிடம் ஜெபிக்கும்படியாக சென்றார். ஊழியரும் இவருக்காக ஜெபித்தபோது, தேவன் பாவம், சாபம் மற்றும் பிசாசின் பிடியில் இருந்து இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் பூரண விடுதலை கொடுத்தார். அதன்பின் தேவன் இவரை ஊழியத்திற்கு அழைத்தார், அழைப்பினை ஏற்று தனது சொந்த கிராமமான தோரணியாவை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக் குறித்து :–** ஆராதனா நன்றாக படிப்பாள். விளையாட்டில் நல்ல ஆர்வமுடையவள்.

**ஜெபியுங்கள்:–** இவளுக்காக, இவளுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :–** ***Mrs. Lavanya Joseph - Palayamkottai.***

---

பிரியமானவர்களே ! நீங்களும் மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் 249 மாணவர்களுக்கு ஆராதவாளர்கள் தேவைப் படுகிறார்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக அறிமுகப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம்.

இதற்கான காணிக்கைகளை அனுப்பும் போது Shalom Charity Mission என்ற பெயரில் D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம்.

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்திப் பணியில் உங்கள் பங்கு

### (ஜெபித்து, ஷாலோம் ஊழியங்களைத் தாங்க முன்வாருங்கள்)

- ரூ. 2000/– மாதந்தோறும் அனுப்பி பீல் சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- ரூ. 1000/– செலுத்தி (ஒருமுறை) ஷாலோம் ஆயுட்கால அங்கத்தினராக (Shalom Life Time Partner) இணைய முன் வரலாம்.
- மாதம் ரூ. 500/– செலுத்தி கிராம ஊழியத்தைத் தாங்க முன் வரலாம். (Shalom Village Sponsor)
- மாதம் ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் மிஷன் பங்காளராக முன் வரலாம். (Shalom Mission Partner)
- ரூ. 600/– மாதந்தோறும் அனுப்பி ஒரு ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். (1 ஆண்டிற்கு ரூ. 7,200) (Shalom Charity Mission)
- ரூ. 1 லட்சம் or 2 லட்சம் or 3லட்சம் நிதி உதவி தந்து கிராம ஆலயம் கட்டித் தர முன் வரலாம்.
- ரூ. 100/– வீதம் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு ......... குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ரூ. 3000/– மதிப்பில் பீல் சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ரூ. 40,000/– மதிப்பில் பீல் சுதேச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பி ஊழியத்தை ஜெபித்துத் தாங்க முன் வரலாம்.
- இந்த மிஷனெரி பணிக்கு உங்கள் பகுதியில் பிரதிநிதியாக செயல்பட முன் வரலாம்.

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- D.D. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....***

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக நீங்கள் காணிக்கை செலுத்திய தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களைத் தொடர்பு கொண்டு தாங்கள் செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

சீனாவில் மிக நீண்ட அதிவேக ரயில் பாதை கடந்த 26.12.2012 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதை தலைநகர் பீஜிங்கிலிருந்து தென் பகுதியில் இருக்கும் குவாங்ஷோ நகர் வரை இந்தப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 2300 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இந்தப் பாதையைக் கடக்க சுமார் எட்டு மணி நேரம் மட்டுமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் போலியோ சொட்டு மருந்து வழங்கிக் கொண்டிருந்த ஆறு பேர் சுட்டக் கொல்லப்பட்டனர். இதில் ஐந்து பேர் பெண்கள். அந்நாட்டில் அதிகளவில் போலியோ நோய் காணப்படும் நிலையில், அதை ஒழிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆதரவிலான திட்டம் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இத்தாக்குதலை அடுத்து அப்பகுதிகளில் போலியோ தடுப்பு வழங்கும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சேலம் மாவட்டத்தில் மேச்சேரி என்ற இடத்தின் அருகே உள்ள பட்டாசு தயாரிக்கும் கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பெண்கள் ஏழு பேர் அடங்கலாக எட்டுபேர் உயிரிழந்தனர்.

இந்தியாவிலேயே சைக்கிள் ஓட்டுபவர்கள் சாலை விபத்துக்களில் சிக்கி இறக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிப்பதாக மத்திய தரைவழிப்போக்குவரத்து அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. வட இந்திய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் தான் தமிழ்நாட்டைவிட அதிக அளவில் சைக்கிள் ஓட்டுபவர்கள் விபத்துக்களில் உயிரிழந்திருக்கிறார்கள் என்று அந்தப் புள்ளி விவரம் கூறுகின்றது.

கோமா நிலையில் இருக்கும் மனித மூளை சிந்தித்து செயற்படும் திறனுடன் இருப்பதாகவும், தான் இருக்கும் சூழலை அதனால் உணரமுடியும் என்றும், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளை அது நினைவில் பதிந்து கொள்கிறது என்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நன்றி : www.bbc.co.uk


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



## கிராம ஆலயம்

# பாட்டன்புரா குஜராத்

பாட்டன்புரா கிராமம் குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு இயேசு கிறிஸ்துவின் பெயரைக் கூட அறியாத பீல் ஆதிவாசி ஜனங்கள் மிக அதிகம். திருடர்கள், குடிகாரர்கள், மந்திரவாதிகள் நிறைந்த இந்த கிராமத்தில் மங்குபாய் புரியா என்ற பீல் ஆதிவாசி சகோதரர் வாழ்ந்து வந்தார்.

இவரது வீட்டில் அனைவரும் பிசாசின் பிடியில் சிக்கி, நோய்வாய்ப்பட்டு பல ஆண்டுகள் மருத்துவம் மற்றும் மந்திரம் என சுமார். ரூ. 1.5லட்சம் வரை விடுதலைக்காக செலவு செய்தனர். ஆனாலும் ஒவ்வொரு வருடமும் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிடுவார்கள். ஒருநாள் சிமளியா என்ற கிராம ஆலய ஊழியர் சகோ. வீர்சிங் பர்மார் அவர்கள் மூலமாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து, ஜெபிக்கும்படியாக குடும்பமாக அவரிடம் வந்தார்கள். ஊழியரும் அவர் குடும்பத்திற்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தினைக் கேட்டு தேவன் முழுக் குடும்பத்தினரையும் சில வாரங்களில், பிசாசின் பிடியிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுவித்தார். அதன்பின் அந்தக் குடும்பம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பாவ மன்னிப்புப் பெற்று சபைக்குச் செல்ல ஆரம்பித்தது.

சகோ. மங்குபாய் வேதத்தைப் படித்து கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வந்தார். அவரது உள்ளத்தில் தேவன் ஊழியம் செய்யும்படியான வாஞ்சையை ஏற்படுத்தவே, அவரது வீட்டில் ஆராதனை ஆரம்பித்தார். ஆராதனைகளில் பங்கு பெற்றும், சுவிசேஷத்தைக் கேட்டும் பாட்டன்பூரா கிராமத்தில் அநேகர் விடுதலையும் இரட்சிப்பும் பெற்றனர். சுற்றியுள்ள கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க சகோ. மங்குபுரியா முழுநேர ஊழியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து ஷாலோமில் இணைந்து ஊழியம் செய்து வந்தார்.

தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே அவருடைய நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். அந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்பட ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வந்தது. ஒவ்வொரு ஆராதனையிலும் சபையில் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தபடியினால் தேவனை ஆராதிக்க போதுமான இடமில்லை. ஆகையால் பழைய ஆலயம் இடிக்கப்பட்டு 50’ X 20’ என்ற அளவில் ரூ. 3 இலட்சம் மதிப்பில் பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டு, 08.04.2012 அன்று பிஷப். தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தில் தற்போது 65க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். தேவனுக்கே மகிமை!

இந்த கிராம ஆலயம் **Mr. Prakash & Mrs. Annie** (USA) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# சுதேச ஊழியர்களுக்கான புத்தாண்டு
# வாக்குத்தத்த கூடுகை (குஜராத், இராஜ், ம.பி,) - 2013



பாடல் வேளை – சகோதரி வஹிதா தேவதாஸ்



ஆராதனை வேளை



தேவ செய்தி – பிஷப் வி. தேவதாஸ் அவர்கள்



கூடியிருந்த ஊழியர்கள் மற்றும் ஊழியர் மனைவியர்



பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு
அன்பளிப்பு கொடுத்து வரவேற்கும் ஊழியர்கள்



கர்த்தருடைய பந்தி